பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 8 திங்கட்கிழமை (24-09 2001) தொலைபேசி 3378 ஒலி 287

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் இலக்கில் தமிழீழவிடுதலைப்புலிகள் இடம்பெறவில்லை

### அமெரிக்க தூதரகப்பேச்சாளர் ஸ்ரீபன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசாங்கம் பேச வேண்டுமென்பதில் அமெரிக்காவின் நிலைப்பாட்டில்எந்த விதமான மாற்றமும் இல்லையென கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகப் பேச்சாளர் ஸ்ரீபன்கோல்கேற் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகஅவர்மேலும்கருத்து வெளியிடுகையில்;

பயங்கர வாதத்திற் கெதிரான யுத்த நடவடிக்கை, இலங்கையின் இனப்பிரச்சினை மற்றும் யுத்தநிறுத்த விடயங்களில் அமெரிக்காவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை.

பயங்கரவாதத்திற்கு இடமளிக்கும், மற்றும் அதனை ஊக்குவிக்கும் நாடுகளுக்கு எதிரான யுத்தத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்குமிடையில் பலத்த வேறுபாடு உள்ளது. (8 ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்கட்சி உறுப்பினர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சவுக்கன் கேணி பகுதியில் நேற்றுக் காலை தமிழ்க் கட்சி உறுப்பினர் ஒருவர் பிஸ்ரல்குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் ஏறாவூர் வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

(ந-4)

### 17வது திருத்த சட்டமூலம்

# வாக்கெடுப்பு நடக்கும்போது கூட்டணி வெளிநடப்புச் செய்யும்!

## விவாதத்தில் பங்குபற்ற முடிவு

(நமது நிருபர்)

நீண்ட காலமாக நாட்டைச் சீரழித்து வரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல், சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுவது தவறு எனச் சுட்டிக் காட்டி 17-வது திருத்தச் சட்டமூலத்தை எதிர்த்து உரையாற்றிவிட்டு, வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது பாராளு மன்றத்தை விட்டு வெளியேறுவதென தமிழர் விடுதலைக் கூட்டணியின்செயற்குழு நேற்றுக் கூடித் தீர்மானித்துள்ளதாக கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் யாழ். மாவட்ட எம். பியுமான வீ. ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் ஆதரவுக் கட்சியான ஜே வி.பியுடன் கண்டுள்ள இணக்கப்பாட்டை அடுத்து பாராளுமன்றத்தில் அரசியல் அமைப்பின் 17வது

இச்சட்ட மூலம் குறித்து ஆராயும் பொருட்டுகூட்டணியின் செயற் குழுக் கூட்டம் நேற்றுகூட்டணியின்சிரேஷ்ட உபதலைவரும், யாழ் மாவட்டஎம்,பியுமான வீ.ஆனந்சங்கரியின் தலைமையில் கூடிய போது மேற்கண்டவாறு

சுமார் 20 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் மாலை 4 மணியில் இருந்து இரவு 7மணிவரை நடைபெற்ற இச்செயற்குழுக் கூட்டத்தில் காரசாரமானவாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## பிரேரணைக்கு ஆதரவு வழங்க தமிழர் விடுதலைக் கூட்டணி நிபந்தனை

[கொழும்பு]

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு மீது ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவரவுள்ள நம்பிக்கை இல்லாத்தீர்மானத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி எழுந்த மானத்தில் ஒப்பமிட மாட்டார்கள் எனகூட்டணி வட்டாரங்கள்தெரிவித்துள்ளன:

ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்னர் கொண்டுவரப் பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்துக்கு கூட்டணி எம்பிக்கள் ஆதரவு தெரிவித்து ஒப்பமிட்டிருந்தனர்.

(08ம் பக்கம் பார்க்க)

## 17வது திருத்தசட்டமூலத்தை ஆதரிப்பதா? எதிர்ப்பதா? ஐ தே.க.இன்று முடிவெடுக்கும்

(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 17 வது திருத்தச்சட்ட மூலம்

பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் நடைபெறவுள்ள

டுள்ள இணக்கப்பாட்டை அடுத்து பாராளுமன்றத்தில் அரசியல் அமைப்பின் 17வது திருத்தச் சட்ட மூலம் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சங்கரியின் தலைமையில் கூடிய போது மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளது.

இச் செயகுழுக் கூட்டத்தில்

பிரதிவாதங்கள் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் அமைப்பின் 17வது திருத்தச்சட்ட மூலத்தை ஆதரிக்க வேண்டும் என்று ஒரு சாராரும் ஆதரிக்கக் கூடாதென்று மற்றொரு

(08ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 17வது திருத்தச்சட்ட மூலம் குறித்து ஆராய்வதற்காக ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் இன்று காலை நடைபெறவுள்ளது.

பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்குகட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தலைமை தாங்குகிறார்.

இக்கூட்டத்தில் அரசியல் அமைப்பின் 17 வது சட்டத்

(08ம்பக்கம் பார்க்க)

# 17வது திருத்தசட்ட மூலம் இன்று சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 17வதுதிருத்தசட்டமூலம் இன்று பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் விவாதம்இரவு 9 மணிவரையும் சுமார் 11 மணித்தியாலயங்கள் தொடர்ந்து இடைவேளை எதுவுமின்றி நடைபெறும்.

இத் திருத்தச் சட்டமூலத்தின் விவாதம் முடிவடைந்ததும் வாக்கெடுப்பிற்கு விடப்படும். இச்சட்ட திருத்தமூலம் தொடர்பாக நேற்று அரசுக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜே.வி.பி)இடையிலான இறுதிக்கட்ட பேச்சுவார்த்தை நடை பெற்றது.

(08ம் பக்கம் பார்க்க]

# முல்லைக் கடற்பரப்பில் சமர்

# டோறாப்படகு மீது புலிகள் தாக்குதல்

(வவுனியா)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்றுஅதிகாலை விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கு மிடையே பலத்த மோதல் இடம்பெற்றுள்ளது.

இம்மோதலின்போது கடற்படையினருக்குச் சொந்தமான அதிவேக டோறாப் படகொன்று மூழ்கடிக்கப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

நேற்றுஅதிகாலை முல்லைதீவுக் கடற்பரப்பில் காணப்பட்ட இரண்டு மர்மக்கப்பல்களையும் நோக்கி கடற்படையினரின் டோறாப்படகுகள் விரைந்துசென்றவேளை விடுதலைப்புலிகளின் தற்கொலை

(08ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திர ஆணைக்குழு விவாதத்தில் ரெலோ கலந்து கொள்ளாது

## செல்வம் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள அரசியல் அமைப்பின் 17 வதுசட்ட திருத்தச்சட்ட மூலம் தொடர்பானவிவாதத்திலோ வாக்கெடுப்பிலோ ரெலோ அமைப்பு கலந்து கொள்ள மாட்டாது என்று ரெலோவின் வன்னிமாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இருந்து நேற்று அவசரமாகநாடுதிரும்பிய செல்வம் அடைக்கலநாதன் எம்.பியுடன்தொடர்பு

(08ஆம் பக்கம் பார்க்க)

# இன்று அல்லது நாளை மீண்டுமொரு தாக்குதல்

## அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

அமெரிக்கா மீது கடந்த வாரம் இடம்பெற்ற விமானத்தாக்குதலையடுத்து இரண்டாம் கட்டமாக மற்றுமொரு தற்கொலைக் குண்டுத்தாக்குதல் இன்று அல்லது நாளை இடம் பெறலாமென அமெரிக்கா தனது நேசநாடுகளுக்கு எச்சரித்துள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் எமக்கு வழங்கிய ஆணையே எமது சேவை உருப்பெறக்காரணம்

## திருநெல்வேலி சந்தைக் கட்டிடத் திறப்புவிழாவில் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே உள்ள பிரதேச சபைகளுள் நல்லூர் பிரதேச சபை இன்று அபிவிருத்தியடைந்து நல்லூர் பிரதேசத்திலே மக்களுக்கும் பணியாற்றுகின்ற தலை சிறந்த நிறுவனமாக மாற்றம் பெற்றுள்ளது. அந்த மாற்றத்துக்கு வழி 1998 இல் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது நல்லூர் பிரதேச மக்கள் எமக்கு வழங்கிய அதிகாரமே வழி சமைத்தது. இப்பகுதி மக்கள் வழங்கிய ஆணையை மையமாகக் கொண்டு நாம் மக்களுக்கான சேவைகளை தடங்கலின்றி ஆற்றி வருகின்றோம்.

இவ்வாறு ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதிஅமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபையின் தலைவருமான க. மணிபல்வராஜன் (நிசாந்தன்) அண்மையில் திருநெல்வேலி சந்தை வளவில் நிர்மாணிக்கப்பட்ட நவீன சந்தையின் கடைத் தொகுதியைத் திறந்து வைத்து தலைமையுரை ஆற்றும்போது தெரிவித்தார்.

கடைத் தொகுதியின் முதலாவது கடையை பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜனும் இரண்டாவது கடையை யாழ். மாவட்ட மேலதிகஅரசஅதிபர் து. வைத்திலிங்கமும் சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தனர்.

பிரதேச சபைத் தலைவர் அங்கு தொடர்ந்துஉரையாற்றுகையில்;

இன்று யாழ். குடாநாட்டிலே அபிவிருத்திப்பாதையில் முன்னணியில் நிற்கின்ற நல்லூர் பிரதேச சபையானது தொடர்ந்தும் இப்பிரதேசமக்களுக்கு அதன் பரந்துபட்ட சேவையை ஆற்றும் என்பதில் எவ்விதஐயமில்லை. இச்சபையினைப்பொறுப்பேற்றகாலத்திலே திருநெல்வேலி சந்தை எவ்வகையில் காட்சியளித்தது என்பதைப்பொதுமக்கள் அறிவர்.

மழை காலத்தில் கால் வைக்க முடியாதவாறு சந்தை காட்சியளித்தது. இன்று இச்சந்தையிலே பெரும்பாலான பகுதி மாற்றியமைக்கப்பட்டு வியாபாரிகளுக்கும் பொது மக்களுக்கும் பெரும் நன்மைகள் கிடைக்கச் செய்துள்ளோம். யாழ். குடா நாட்டிலே இருக்கின்ற பிரதேச சபைகளிலே கூடுதலான நிதி எமது பிரதேசசபைக் கேஒதுக்கப்பட்டுள்ளது.

எமது கட்டுப்பாட்டில் இல்லாத ஏனைய கட்சிகளின் பொறுப்பிலே இருக்கின்ற மாநகர சபை, நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகள் அந்தப் பிரதேசத்து மக்களின் எதிர்பார்ப்பினை சிறிதளவேனும் பூர்த்தி செய்ய முடியாத அளவிலே இன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த செயல் பாட்டினை விருத்தி செய்வதற்கு அந்தப் பிரதேசத்தின் தலைமைத்துவத்துக்கு எவ்வித வழிகாட்டலும் இல்லாத நிலையே முகிய காரணமாகும்.

பிரதமவிருந்தினராகப் பங்கு கொண்ட யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தமதுரையில்;

யாழ். குடாநாட்டிலே இன்று திருநெல்வேலி நகரம் முக்கியத்துவம் பெற்று வருகின்றது. நல்லூர் பிரதேச சபையின் செயற்பாடுகளால் இந்த நகரம் துரித வளர்ச்சி பெற்றுள்ளது. நல்லூர் பிரதேச சபை மிக விரைவில்நகர சபையாகத் தரம் உயரும்என நான் நம்புகின்றேன். விளைநிலப் பூமியாகிய இப்பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படுவதை நாம பாராட்ட வேண்டும். மேலும் இங்கு சுகாதாரம் உட்பட பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேலும்செய்யப்பட வேண்டும் எனக்குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்பின் படிப்புப் பீட பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் உட்பட பிரமுகர்கள் பலரும் உரையாற்றினர். (க-77)


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி மெடிக்கல் பக்கல்ரி முன்பாக நான்கு பரப்புக் காணியில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட மாடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: R. ஜெயரட்ணம் (ரமேஸ்) 124, கந்தன் கருணை லேன் கோவில்வீதி, நல்லூர். (3580)

### தேவை

தரமான கோட், சூட், என்பன நியாய விலைக்கு ,எடுக்சப்படும். தொடர்பு:M G.M. 163, மின்சார நிலைய வீதி. பஸ்நிலையம் முன்பாக யாழ்ப்பாணம். [3581]


பருத்தித்துறைஇளம்விதவைப்பெண்விவகாரம்

# யாழ். அரச அதிபரின் கோரிக்கை நிராகரிப்பு

## கொழும்பிற்கு வருமாறு பணிப்பு

[கொழும்பு]

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மனித உரிமைகள் மீறப்பட்ட சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு பருத்தித்துறை இளம் விதவைப் பெண்ணால் செய்யப்பட்ட புகார் சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் யாழ்ப்பாண அரசாங்க அதிபரினால் விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக மேற்படி ஆணைக் குழு அறிவித்துள்ளது.

குறித்த பெண் தனது விதவைப் பென்ஷனையும், குடும்ப அட்டையையும் பருத்தித்துறை பிரதேச செயலர் வழங்க மறுத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு முறையிட்டிருந்தார்.

அவரின் மேற்படி முறைப்பாடு குறித்து,விசாரணைகளை மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் பருத்தித்துறை பிரதேச செயலரையும் யாழ். அரசாங்க அதிபரையும் கடந்த 10 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்திற்குச் சமுகமளிக்க வேண்டுமென மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பாணை அனுப்பியிருந்தது. கடந்த 10 ஆம் திகதி இவர்கள் விசாரணைக்குச் சமுகமளிக்கவில்லை.

யாழ். அரச அதிபர் பருத்தித்துறை விதவைப் பெண்ணின் இப் புகார் சம்பந்தமாகவிசாரணைகளை யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்தில் மேற்கொள்ள நடவடிக்கைஎடுக்குமாறு மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் கடிதம் மூலம் கேட்டிருந்தார்.

அரசாங்க அதிபரின் இக் கோரிக்கையை நிராகரித்து இம் மனித உரிமை மீறல் விசாரணை கொழும்பு தலைமையகத்திலேயே நடைபெறும் என அறிவித்து இது சம்பந்தமாக இம் மாதம் 25 ஆம் திகதி பருத்தித்துறைபிரதேச செயலரையும், யாழ். அரச அதிபரையும் இலங்கை மனித உரிமை ஆணைக் குழு கொழும்பு அலுவலகத்திற்குச் சமுகமளிக்க வேண்டுமென அழைப்பாணை அனுப்பி வைத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழு உயரதிகாரியொருவர் தெரிவித்தார். [க-52]

# அமைச்சர் டக்ளஸுடன் நாளைவிவசாயிகள் சந்திப்பு அதிகாரிகளுக்கும் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயிகள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நடத்தவுள்ள சந்திப்பு நிகழ்வுநாளை 25 ஆம் திகதி காலை 10 .00 மணிக்கு வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் யாழ் அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு கீழ்வரும் திணைக்கள உத்தியோகத்தர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவேண்டுகோள் விடுத்துள்ளார்.

அழைக்கப்பட்ட திணைக்கள. உத்தியோகத்தர் விபரம் வருமாறு

பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்.

மாவட்ட முகாமையாளர், இலங்கை வங்கி/மக்கள்வங்கி, யாழ்ப்பாணம்.

உதவி விவசாயப்பணிப்பாளரும், போதனாசிரியர்களும் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரும் பெரும்பாக உத்தியோகத்தர்களும்.

கால்நடை அபிவிருத்தி திணைக்கள உதவி பணிப்பாளரும், வைத்திய அதிகாரிகளும்.

கூட்டுறவு உதவி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களும்.

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட துறைத்தலைவர்கள்.

விவசாய ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர்கள்.

கால நிலை அவதான நிலைய உத்தியோகத்தர்கள்.

பிராந்திய முகாமையாளர், தெங்கு அபிவிருத்திச் சபையும், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களும்.

பனை அபிவிருத்தி சபை உத்தியோகத்தர்கள்.

கால் நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள். [க]

# கீதைப் பேருரை

(அரியாலை)

நல்லூர் செட்டித் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தில் பிரதி சனிக்கிழமை தோறும் பிற்பகல் 3.00 ம் மணிக்கு கீதைப் பேருரை நடைபெற்றுவருகின்றது. இப்பேருரையை எஸ். மயில்வாகனம் வழங்கி வருகின்றார். (செ-225)

# மிதிவெடியில் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வயல் பெருங்குளப் பிள்ளையார் கோவில் பகுதியிலுள்ள தனது வீட்டைப் பார்க்கச்சென்ற இளைஞர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி ஒரு காலை இழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஆனைக் கோட்டை ஆறுகால்மடத்தை தற்காலிக முகவரியாகக் கொண்ட பாலச்சந்திரன் கஜேந்திரன் (வயது 18) என்பவரே காலை இழந்தவராவார்.

இதேவேளை இவரது தாயாரின் காலிலும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ- 106- 4)

# வெங்காயம் விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

வெங்காயத்தின் விலை தற்போது வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது. உள்ளூர்ச் சந்தைகளில் சின்ன வெங்காயம் கிலோ 12 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. (செ-22-5)

# வாண்மை விருத்தி செயலமர்வு

(செம்பியன்பற்று)

வடமராட்சி கல்வி வலயத்தில் தரம் 1- 5வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வுஇம்மாதம்29ஆம் 30ஆம் திகதிகளிலும், வரும் ஒக்ரோபர் 2ஆம் 6ஆம்திகதிகளிலும் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுகள் வட இந்துமகளிர் கல்லூரி, புலோலி மெ. மி. த. க பாடசாலை, நெல்லியடி ம. ம. வித்தியாலயம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் நடை பெறவுள்ளன. (செ- 42)


# வெளிவருகின்றது... 'படி' PAHDI

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## உலக ஆசிரியர் தின வெளியீடு

யாழ்ப்பாண ஆசிரியர் கல்வி வரலாற்றில் புதிய புலர்வு 'படி' - 02

**பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின் பகிர்வு**

மற்றும் ஆசிரியர் பயிற்சியின் தேர்ச்சிகள்

உளப் பகுப்பாய்வில் கனவுகள், மனித விடுதலைக்கான கல்வி தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபை, பாலர் கல்வி மற்றும் பல அம்சங்களுடன் - 'படி'

விசேட கட்டுரைகளாக

★ பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்களின்
(யாழ், பல்கலைக்கழகம்)

**'ஆசிரியத்துவ ஐந்தொகை'**

பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்களின்
(கொழும்புப் பல்கலைக்கழகம்)

**'கல்வியும் சமூக மேம்பாடும் ஒரு மாற்றுக் கருத்து'**

சிறந்த பாடசாலையும் ஆசிரியர் தொழில் வாண்மையும்
ஜெயசேன புத்பிட்டிய-தேசிய கல்வி நிறுவகம்
செயற்திட்டப் பணிப்பாளர்

நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பமும்
எஸ். ஜலால்தீன் - கல்வி உயர்கல்வியமைச்சு
உதவிப் பணிப்பாளர்

ஆசிரியர்கள், கல்வியாளர்களுக்கு உதவும் கட்டுரைகளுடன்
"படி"! படித்தேன்! படித்தேன்!! படித்தேன் சுரந்தது.

- இதழாசிரியர் திரு. பா. தனபாலன்

World Teacher's Day Jaffna National College Of Education Publication

[C/2634]

# சில நாடுகளுக்கு கதாநாயகனாக விளங்கி, பலநாடுகளுக்கு வில்லனாகிய பின்லேடன்!

இன்று உலகின் சிலநாடு நாடுகளுக்கு கதாநாயகனாக வும், பலநாடுகளுக்கு பயங்கர வில்லனாகவும் பின்லேடன் பேசப்படுகிறான். மூன்றாம் உலகப் போர் அவனால் வெடித்து விடுமோ என்ற ஏக்கப் பரபரப்பின் உச்ச நிலை நோக்கி, நிமிடங்கள் இன்று நகர்ந்து கொண்டிருக்கின்றன.

உலகின் வல்லரசாக நிமிர்ந்து நின்ற அமெரிக்காவின் இருநகரங்களைவிமானங்களால தற்கொலைத் தாக்குதல் நடத்திபேரழிவுகளையும் பேரதிர்ச்சியையும் ஏற்படுத்திய அதிரடிச் செயலின் சூத்திரதாரியான பின்லேடன்பற்றி பெரும்பாலானோர் இப்போதுதான் அறிந்து வருகின்றனர்.

பின்லேடனின் தந்தையின் பெயர் மொகமெட் பின்லேடன். அவர் ஜெமனியைசேர்ந்தவர். அவருக்குப் பல மனைவியர் அவர்களுள் சவுதியைச் சேர்ந்தமனைவிக்கு 1957 ஆம் ஆண்டு பின்லேடன் பிறந்தான். அவனுக்குத்தாய்முறையானவர் பலர் என்ற அடிப்படையில் சகோதர சகோதரிகள் என்ற முறையில் மொத்தமாக 57பேர். அவர்களது வரிசையில் பின்லேடன் 17ஆவது பிள்ளை.

அவன் 6 அடி 5 அங்குலம் உயரமானவன்அவன்உடலுக்கேற்ற வாட்டசாட்டமான நீண்ட கைகால்கள் அடர்த்தியான நீண்டகருந்தாடிநேர்த்தியான இத்தையைஇலடசணங்கள் பொருந்திய கம்பீர தோற்ற முடையவன்.

சவுதிமன்னர்அப்துல்அஸிஸ் பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமையில் முதுகலைமாணிப்பட்டத்திற்காகப் படித்துக் கொண்டிருந்த பின்லேடன், இடையிலேஅதைவிட்டு இஸ்லாம் குறித்து தனதுகல்வியைத் தொடர்ந்து கற்றான். அந்தப் பல்கலைக்கழகத்திலே தான்அப்துல்லாஅஸாஸாவை சந்தித்து தனது தலைவனாக அவரை வரித்துக் கொண்டான்.

அவனது தந்தை பெரிய வர்த்தகச்செல்வந்தர் அவரது கம்பெனி ஒப்பந்தஅடிப்படையில் புனித மக்காவிலும், மதினாவிலும் பள்ளிவாசல்களை திருத்தியமைத்ததிலும், விசாலமாகக் கட்டியதிலும் பெரிய இலாபம் அடைந்தது.

### மூன்று திட்டங்கள்

இந்நிலையில்–

1986 ஆம் ஆண்டிலே அமெரிக்கமத்திய புலனாய்வுத் துறை (Central Intelligetec Agency) யின் பிரதம நிர்வாகியாக இருந்தவில்லியம் கேசே மூன்று திட்டங்களைத் தீட்டியிருந்தார். அவை மிகவும் இரகசியமாக பேணப்பட்டன.

**கபிலர்**

தாம் யுத்தம் தொடுத்த சோவியத் ரஷ்யாவின் விமானங்களைச் சுட்டு வீழ்த்துவதற்கு ஸ்ரிங்கர் ஏவுகணைகளை முஜாகுதீன் தீவிரவாதிகளுக்கு வழங்குவதற்குஅமெரிக்க காங்கிரசை இணங்க வைப்பது.

தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கும், ஆலோசனைகளை வழங்குவதற்கும் அமெரிக்க காங்கிரசைச் சம்மதிக்க வைத்தல்.

பாகிஸ்தானின் புலனாய்வுத்துறையாகிய உள்ளக புலனாய்வுச் சேவை (Pakistan Inter Service intelligence) யின் நீண்ட காலத்திட்டத்தை அமெரிக்க மத்தியபுலனாய்வுத்துறை ஆதரிப்பதற்கு வழிவகுப்பது இத்திட்டத்தின்படி உள்ளக புலனாய்வுச் சேவை உலகெங்கும் உள்ள இஸ்லாமிய தீவிரவாத குழுக்களை பாகிஸ்தானுக்கு அழைத்து யுத்தத்திற்கான பயிற்சிகளை அங்கு அளித்து பின்பு அவர்களை ஆப்கானிஸ்தானிலுள்ள முஜகுதீன்தீவிரவாத இயக்கத்துடன் சேர்த்து சோவியத்திற்கு எதிரான யுத்தத்தில் ஈடுபடுத்துவது.

### பயிற்சி பெறல்

இம்மூன்று திட்டங்கள் குறித்து கேசேமேற்கொண்ட நடவடிக்கையினை பாகிஸ்தான் உள்ளக புலனாய்வுச் சேவை 1982 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுத்திவந்தது.

உலகெங்குமுள்ள முஸ்லிம் தீவிரவாதிகளை யுத்தபயிற்சிக்காகசேர்க்கும்பணி நடந்து கொண்டிருந்த வேளையில் மாணவனாக இருந்த பின்லேடன் அதில் சேர்ந்து பயிற்சி பெற்றான். பயிற்சி முடிந்ததும் பின்லேடன் ஆப்கான்சென்று முஜார்புதீன் இயக்கத்துடன் சேர்ந்து கொண்டான்.

அவனதுதந்தை அந்த இயக்கத்திற்கு தாராளமாகப் பண உதவி புரிந்துவந்தார். அவனுடைய குடும்பமே பேராதரவு அளித்து வந்தது. பின்லேடன் தங்கள் கம்பெனி பொறியியலாளர்களைக் கொண்டு ஆயுதங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கான களஞ்சியங்களையும், போராளிகளுக்குத் தேவையான கட்டடங்களையும் வீதிகளையும் அமைந்தான். இவைகளுக்கு அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறை நிதியுதவி செய்து வந்தது.

### குடும்ப வர்த்தகம்

ஆனால் 1990 ஆம் ஆண்டில் முஜாபுதீன் இயக்கத்திற்கும் பின்லேடனுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டதால் அவன் சவுதி அரேபியாவிற்குச்சென்று தனது குடும்ப வர்த்தகத்தைக் கவனிக்கும் பணியில் ஈடுபட்டான்.

ஈராக் குவைத்தைக் கைப்பற்றியபின் சவுதிக்கு பலமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்றும்ஆப்கானிலிருந்து யுத்தத்தில் தேர்ச்சிபெற்ற படையினரை அழைத்து தமது நாட்டிலே திரம்மிக்க படையினை உருவாக்க வேண்டும் என்றும் அரச குடும்பத்திற்கு பின்லேடன் கோரிக்கை விடுத்தான். ஆனால் மன்னர் வாஹீட் 540,000 இராணுவ வீரர்கள் கொண்டஅமெரிக்க படையை சவுதிக்கு வரவழைத்தார்.

### அதிர்ச்சி

பின்லேடனுக்கு இச்செயல் அதிர்ச்சியைக் கொடுத்ததோடு, கடும் சினத்தையும் கிளறிவிட்டது. அரசகுடும்பத்தவரை கடுமையாக விமர்சித்து குற்றக்கணைகளை அவர்கள்மீது பிரயோகித்தான். முஸ்லிம் அல்லாதவர்களுக்கு தமது நாட்டில் இடம்கொடுத்தமையை இஸ்லாமிய மத அதிகாரச் சட்டம்மூலம் கண்டிக்குமாறு இஸ்லாமிய சமயக் குருமாரை கேட்டுக் கொண்டான். அவன் சொல்வதை பெரும்பாலானோர் பொருட்படுத்தவில்லை. தனது நாட்டில் அமெரிக்கரின் ஆக்கிரமிப்பு, வளைகுடாவில் அமெரிக்கப்படைகள் தங்கி நிற்பது, தமது எண்ணெய் வளங்களை அவர்கள் சூறையாடுகின்றார்கள் என்ற, ஆவேசம் அவன் மனதில் பெற்றோலில் பற்றிக்கொண்ட தீயாக கொழுந்து விட்டு எரிந்தது.

எரியும் உள்ளத்துடன் ஹுசேயின் தரபியின் தலைமையில் இஸ்லாமியப் புரட்சியில் பங்கு கொள்ளும் நோக்குடன் சூடானுக்குச் சென்றான். அங்கிருந்த காலத்திலும் சவுதி அரச குடும்பத்தை பலவாறு குற்றம் கூறி விமர்சித்து வந்தான். ஆத்திரமடைந்த அரசகுடும்பத்தினர் சூடானில் அவன் பெற்றிருந்த பிரஜாவுரிமையை ரத்து செய்து அந் நாட்டை விட்டு வெளியேற்றும்படி சூடானுக்கு தொல்லைக்கொடுத்து வந்தனர். அதற்கு அமெரிக்காவும் சூடானுக்கு சூடான அழுத்தம் கொடுத்து வந்தது.

### குடும்பத்துடன் ஆப்கானில்

எனவே பின்லேடன் 1996 ஆம் ஆண்டு மேமாதம் தனது மூன்று மனைவியருடனும், 13 பிள்ளைகளுடனும் சில அராபிய தீவிரவாதிகள் தனது மெய்ப்பாதுகாவலர்கள்புடைசூழ விசேட ஜெற் விமானத்தில் ஆப்கான் வந்து சேர்ந்தான்.

சூடானில் இருக்கும் போது பின்லேடன் தனது பணச் செழுமையாலும், மற்றவர்களுடன் வைத்துக் கொண்ட தொடர்புகளினாலும் திரம் மிக்க ஆப்கான் போராளிகளைச் சேர்த்துக் கொண்டான். தமது நாட்டில் அமெரிக்கர் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள் என்ற வெறுப்புணர்வுஅவர்களிடமும் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

இத்தகைய நிலையில் ஆப்கான் வந்த பின்லேடன் 1996 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் அமெரிக்காவுக்கு எதிரான புனிதப் போரை (ஜிகாத்) பிரகடனம் செய்தான. □

## மானிய நிதியை பெறமுடியும்

(புலோலி)

வடமராட்சிப் பகுதியில் கடந்த வருடம் மலகூடம் அமைத்ததற்கான மானியக் கொடுப்பனவுகள் வந்துசேர்ந்துள்ளன மானியக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான காசோலைகள் பருத்தித்துறை சுகாதாரவைத்திய அதிகாரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-52)

## கால் நடைச் சந்தை

(புலோலி)

கரவெட்டிப் பிரதேச செயலகபிரிவில் உள்ள நவிண்டிலில் கால்நடைச் சந்தை பொன்று திறந்து வைக்கப் பட்டுள்ளது. இக் கால்நடைச் சந்தை பிரதி சனிக்கிழமைகளில் இயங்கி வருகின்றது. இச்சந்தையில் கோழிகள், ஆடுகள்' மாடுகள் என்பன சந்தைப் படுத்தப்பட்டு வருகின்றது. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமே இக் கால்நடைச் சந்தையைத் திறந்து வைத்துள்ளது. [அ-52]

## மீள்பதிவினை மேற்கொள்ள கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக கலைப்பீடசிரேஷ் மாணவர்கள் கல்வியாண்டு 2001/2002 இற்கான மீள பதிவினை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர்கள் எதிர்வரும் 1 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரையும் 3 ஆம் வருட மாணவர்கள் 8 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையும் 4 ஆம் வருட மாணவர்கள் 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையும் 2ஆம் வருட மாணவர்கள் 15 முதல் 19 ஆம் திகதிவரையும் பதிவினை மேற்கொள்ள முடியும் மகாபொல புலமைப்பரிசில்க் கொடுப்பனவுகள் மீள் பதிவு மேற்கொள்பவர்களுக்கே வழங்கப்படும் என்றும் விண்ணப்பங்கள் கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என உதவிப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (க-106)

## 17வதுதிருத்தச் சட்டமூலவிவகாரம் அரசின் முயற்சிக்கு எதிர்க்கட்சியினர் ஆப்பு

(கொழும்பு)

17 வது திருதத சட்டமூலம் ஊடகங்களுககான சுதந்திரத்தைத் கட்டுப்படுத்த பொதுஜன ஐக்கிய முன்னணி மேற்கொண்ட முயற்சியை அனைத்து எதிர்க்கட்சிகளும், ஊடகங்களும் முறியடிததுள்ளதசக எதிர்க்கடசித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

17 வது திருத்தச் சட்டம் தொடர்பாக அரசும் ஜே.வி.பி யும் மேற்கொண்ட பேச்சுகளை அடுத்து அவர் விடுதத அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் மக்கள் விடுதலை முன்னணியுடன் 17 வது திருத்தச் சட்ட பேச்சு வார்த்தையின் பின்னரே ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான சட்ட மூலம் கொண்டுவரப் பட்டது. எவ்வாறாயினும் ஊடகத்துறையுடன் தொடர்புடைய அமைப்புக்கள் உயர் நீதி மன்றில் முறையிட்டதையடுத்தே இந் நடைமுறைஜன நாயகத்திற்கு விரோதமானதென உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

இச்சட்டம் மூலம் அரசாங்கம் கொண்டுவர இருந்தஊடகத் துறை சார்ந்த சட்டங்களை அனைத்து, எதிர்க் கட்சிகளும் நேற்று முன் தினம் நடை பெற்ற பேச்சு வார்த்தையில் எதிர்த்துள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தனது அறிக்கையில் மேலும் குறப்பிட்டிருந்தார். (4)

## தொடரும் புனரமைப்பு வேலைகள்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலயபுனரமைப்பு வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. (செ-223)

## 51 வது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

மாகியப்பிட்டி சூரியோதய சனசமூக நிலையததின் 51 வது ஆண்டு நிறைவு விழா கடந்த சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் நிலைய வளாகத்தில் தலைவர் சாள்ஸ் நிமலன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக வலி/தென்மேற்கு பிரதேச செயலர் நா. வேதநாயகன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மாகியப்பிட்டி பங்குத் தந்தை அருட்திரு. ம. பெ. ஞானரட்னம், தென்னிந்திய திருச்சபை அருட்திரு த.அசோக்குமார் மற்றும் மனித முன்னேற்றநடுநிலைய இயக்குனர் அருட்திரு.சி.ஜி. ஜெயக்குமார் ஆகியோரும் இவ் விழாவில் கலந்து கொண்டனர். (க-232)


## சங்கே முழங்கு

## பசுவதையை தடுப்போம்

யாழ்ப்பாண சைவத் தமிழ்மக்கள் ஒரு காலத்தில் பசுவை தெய்வமாகப் போற்றி வழிபட்டார்கள். ஆனால் இன்று அந்த நிலைமை அடியோடு மாறி விட்டது. இதற்கு அரச நிறுவனங்களும் அது சார்ந்த உத்தியோகத்தர்களும் காரணமாவர். குறிப்பாக யாழ். மாநகர சபைக்குள் பசு மாடுகள் வெட்டுவதை தவிர்ப்பதாக அதிகாரிகள் உறுதியளித்திருந்த போதிலும் இப் பகுதியில் பசு மாடுகள் வெட்டப்படுவது இன்னமும் நிறுத்தப்படவில்லை. இதேவேளை மாடு வெட்டும் விடயததில் பின்வரும் விடயங்களும் இதுவரை கடைப்பிடிக்கப்படவில்லை.

1. மிருக வைத்தியரின் அனுமதியுடன் மாடுவெட்டப் படுவதில்லை.
2. இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளை வெட்டுவதற்கு 24 மணி நேரம் முன்னதாக அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டப்படுவதில்லை. [அவ்வாறு கட்டப்படுவதன் மூலம் பசுமாடுகள் வெட்டப்படுவது தவிர்க்கப்படும்]
3. போயாதினங்களிலும் சில இறைச்சிக்கடைகள் திறக்கப்பட்டு ஒளிபபு மறைப்புடன்விற்பனை நடைபெறுகிறது.

எனவே இது விடயங்களில் யாழ். மாநகர சபையின் அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து பசுவதையை தடுக்க உதவ முன்வரவேண்டும்.

ப. சந்திரசேகரம் M. A (தலைவர்)

ச. பெ. வரதராசன் (செயலாளர்)

யாழ்.மாவட்ட பசு இனவதைதடுப்பு பாதுகாப்புச் சங்கம்.


## சுகவாழ்வு

எச். ஐ. வி. தொற்றுள்ள தாயொருவரிலிருந்து கர்ப்பகாலத்தில், மகப்பேற்றின் போது, பாலூட்டும் போதும்கூட பிள்ளைக்கு தொற்று ஏற்படவாய்ப்புண்டு. (எய்ட்ஸ் வருமுன் காப்போம்.)

தரிசனம்-

# செய்தித் துளிகள்

## இருபாலையில் விபத்துக்கள்

(இருபாலை)

இருபாலை கற்பகப்பிள்ளையார் ஆலயம் முன்பாக நேற்று முன் தினம் இரு விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிள் ஒன்று பலத்த சேதத்திற்குள்ளாகியது.

அந்தவேளையில் வானைச் செலுத்தி வந்த சாரதி இந்த விபத்து ஏற்படப் போகிறதென்பதை அவதானித்து தாமும் அதில் சிக்காது தவிர்ப்பதற்காக எடுத்த அவசர முயற்சியில் அந்த வானும் விபத்துக்குள்ளாகியது.

மேற்படி விபத்துக்களில் எவருக்கும் உயிராபத்தோ காயமோ ஏற்படவில்லை.

(செ-221)

## மாகியப்பிட்டியில் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மாகியப்பிட்டி சூரியோதய சனசமூகநிலைய பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா நவாலி திருச்சபை வளாக மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்லூரி உப அதிபர் அ விமலேந்திரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். கௌரவ விருந்தினராக வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ.அ.ஜோன்சன் மற்றும் லயன் எஸ். ஜே. செல்வராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

[க-232]

## கலந்துரையாடல்

(மீசாலை)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சாரணிய பயிற்சி வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்ஒன்று இன்று திங்கட்கிழமை மு.ப 11.00 மணிக்கு அதிபர் எஸ்.சதாசிவமூர்த்திதலைமையில்நடைபெறவுள்ளது.

[செ-229]

## பொருளியல் ஆசிரியருக்கு வெள்ளிவிழா

(இருபாலை)

இருபத்தைந்து வருடங்கள் கல்விச் சேவையாற்றிய பொருளியல் ஆசிரியர் சி. வரதராஜனின் வெள்ளி விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது.

இவ்விழா பொருளியல் கல்லூரி மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது.

(செ-221)

## உதைபந்தாட்ட போட்டி

(ஏழாலை)

தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பி. ப. 2.30 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் மோதவுள்ள பாடசாலை அணிகள் விபரம் வருமாறு;

★ 16 வயது கீழ்ப் பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமும்,

★ 18 வயது கீழ்ப் பிரிவில் கட்டுவன் புலம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து மல்லாகம் மகா வித்தியாலயமும் மோதவுள்ளது.

(செ-12)

## கலைப்பீட விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கல்வியாண்டு 2001/2002 கலைப்பீட மாணவர்களுக்கான விரிவுரைகள் அடுத்தமாதம் 1ஆம் திகதி ஆரம்பமாக உள்ளதாக கலைப்பீட உதவிப்பதிவாளர் தெரிவித்துள்ளார்.

அனைத்து வருட கலைப்பீட மாணவர்களையும் இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்களையும் அன்றையதினம் விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

(க-106)

## பல்கலை மாணவருக்கு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ், பல்கலைக்கழக மாணவர்களுக்கான 1998/99 1999/2000, 2000/2001 இற்கான உதவிப் பணக்கொடுப்பனவு அடுத்தமாதம் 3 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதிவரை யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையில் வழங்கப்படவுள்ளது.

இக் கொடுப்பனவை பெற்றுக்கொள்வோர் பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை, உதவிப் பணக் கையேடு, 5 ரூபா முத்திரை ஆகியவற்றுடன் வருகை தருமாறு நிதியாளர் அறிவித்துள்ளார்.

(க-106)

## விலை வீழ்ச்சி

(புலோலி)

கடந்த சில வாரங்களாகத் திராட்சைப்பழத்தின் விலை யாழ். மாவட்டத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது.

கிலோ 100 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டு வந்த திராட்சைப்பழம் தற்போது கிலோ 80 ரூபா விற்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

அதிக உற்பத்தி, வெளி மாவட்டங்களில் சந்தை வாய்ப்பின்மை ஆகியவற்றின் காரணமாகவே திராட்சைப் பழத்தின் விலைவீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-52)

## மக்கள் நலன் கருதி ஒத்துழையுங்கள்

[யாழ்ப்பாணம்]

"இன்னலின் எல்லையிலே நின்று பல்வேறு வகைகளில் புதிய புதிய வேதனை அனுபவங்களை நாளாந்தம் பெற்று வரும் எம்குடாநாட்டு மக்களின் நன்மை கருதி குறிப்பாக இளஞ்சிறாரின் நல்வாழ்வு குறித்து பாடசாலைகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலின் பேரில் இச்சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு பொது மக்கள், பொது அமைப்புகள், சமூக நலன் விரும்பிகள், பெற்றோர் போன்றோரின் பூரண ஒத்துழைப்பு கிடைக்க வேண்டும்.

இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை சுன்னாகம் மயிலணி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற தரம் I தரம் II க்கான சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்த வலி. தெற்குப் பிரதேச சபைத் தலைவரான கே. கமலசேகரம் (பாபு) உரையாற்றுகையில்கூறினார்.

இந் நிகழ்வில் வித்தியாலய அதிபர் ரி. சற்குணசர்மா, பிரதி அதிபர் எஸ். ஞானச்சந்திரன் முதலானோரும் உரையாற்றினர்.

(அ)

# யாழ். பல்கலைக்கழக (வெளிவாரி) கலைமாணி பரீட்சை முடிவுகள் கடந்த வாரம் வெளியாகின

## 19 பேர் சிறப்புச் சித்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பரீட்சைப் பிரிவினால்நடத்தப்பட்ட 1999ஆம் ஆண்டின் கலைமாணி பரீட்சை முடிவுகள் கடந்த வாரம் வெளியிடப்பட்டன.

இப் பரீட்சையில் மேற்பிரிவில் ஐந்து பேர் இரண்டாம் தரத்தில்14 பேர் கீழ்ப் பிரிவில் இரண்டாம் தரத்திலும் சித்தி பெற்றுள்ளனர்.

மேலும் 104 பேர் சாதாரண சித்தி பெற்றுள்ளனர். சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:-

**மேற்பிரிவு இரண்டாம்தரம்**

ஆர் அனுஷா, என் ராஜேஸ்வரி, எஸ். வாசுகி, வி. வெண்ணிலா, என். தயானி.

**கீழ்ப்பிரிவு இரண்டாம்தரம்**

வை. சசிகலா, ஜி. குணானந்தன், பி. சிந்துஜா ஜி. கிருஷ்ணகுமார், எஸ். குணாலினி, எஸ்.ராஜேஸ்வரன் ஏ, விவோதினி, பி. வைகாசினி ஆர். சுகிர்தா, எஸ். சுகந்தினி, ரி. சிவசுபாங்கினி, ரி. சிவாகினி, ரி. மதனராஜி, எஸ். கார்த்திகா,

சாதாரண சித்தி பெற்றோர் விபரம் வருமாறு:-

ரி. ராஜினி, ஆர் சுபாஜினி, எஸ். சத்திய தேவி, எஸ். கிருஷ்ணானந்தம் கே. கண்ணதாசன், வி. பானுமதி, வை. சுஜீதா, வை சுனித்திரா வி. முருகதாஸ், எஸ். பிரணவநாதன், எஸ். மதிபாலன் எப்.எ. மரியதாசன், வி. வித்தியாகர், எம். வித்தியா, ஆர். தமிழ்ச்செல்வி, கே. ரஞ்சிதமலர், எஸ். நந்தினிதேவி கே. கமலினி, எஸ். செல்வராணி, ஜே. எஸ். அருள்நாத், கே. சுகந்தினி.

எஸ். கமல தர்சினி, கே. சஜிதா, எக்ஸ். டிலாணி, என். துஷ்யந்தினி, ரி இளங்குமரன், வி. பரமேஸ்வரி, ஆர். அனிதா, ஜே. இந்துமதி, ஆர். கஜனி, ஆர். ராஜேஸ்வரன், கே. விஜிதா, எஸ். தயாநிதி, என். பிரபா, ரி. பவித்திரா, ரி. கோடீஸ்வரன், எஸ். வினோதினி, எஸ். வேதநாயகம், எம். வசந்தகுமார், வி. வசந்தநாயகி, கே. வளர்மதி, எஸ். வசந்தமாலா, எ. வளர்மதி, வி. உமா,

எஸ். தவராணி, ஜே. தற்பரன், கே. தனவதி, கே. தனரூபி, பி. சுதாஜினி, வி. சுரேஸ் என். சுஜி, எஸ். சுஜாத்தா, வி. சுபாஜினி, கே. சுபாங்கி, பி. சுபாயினி, ரி. சுபாரஞ்சனி, எ. சூரியவதனி, எஸ் சிவானந்தி, ரி. சர்மிளா, ஆர். சசிகலா, ரி. சாந்தகுமாரி, ரி. ரூபி, வி. ராதிகாதேவி, எஸ். ரஜனி, என். உஷானந்தினி, கே. ராஜேஸ்வரி, எஸ். பிரணவன், என். நிரோசன், எ. நீலலோசனி, வே முத்துரூபன், எஸ். மதுமதி எஸ். மதிரஜனி, எஸ். மாதினி என். மதனரூபா, பி. மதன், எ. மஞ்சுளா, டி. பி. மன்மதநாயகம், கே. மாலினி, கே. மகாலட்சுமி, ரி. குணரட்ணம், கே. கிருபாமதி, எஸ். கல்பனா, வி. ஜயந்தி, எஸ். ஜெசிந்தன், எம் ஜெயசிறி, எஸ். நந்தினி, பி. ஹேமா, எஸ். கீதாஞ்சலி, எம். துவாரகா, எஸ். கௌசியா, எஸ். பார்த்தீபன், ஜி. அருள்நிதி, கே. அகல்யா, சி. என். விக்கினேஸ்வரன், ரி. கோபாலகிருஷ்ணன், கே. ஜெயகுமார், ஆர். பஞ்சலிங்கம், கே. இந்திரகுமார், கே. சத்தியபாலன், வை. ஜெயந்தினிதேவி, எ. சிவபாதம், கே. ஆர். கமலநாதன், என். சூரியகுமார், ரி. சிவஞானம்.

(க-106)

## இராசிபலன்

24/09/2001
புரட்டாதி 8 திங்கள்
சப்தமி மு.ப 7.29
மூலம் முழுவதும்
ராகுகாலம் 7.32-9.02
நல்ல நேரம் 12, 02-1.32
சித்தம்

**மேடம்**

உடல் உழைப்பு, அச்சமான நிலை, பிரயாணம், புதிய முயற்சி.

**இடபம்**

அதிகாரம், வீண் பிரச்சினை, காரிய தடங்கல், பிரயாணபயம்.

**மிதுனம்**

அபூர்வ சந்திப்பு, கௌரவம், தனலாபம், காரிய அனுகூலம்.

**கடகம்**

முயற்சி கைகூடும், சுவாரஸ்யம், திடீர் பயணம், உடல் நலம்.

**சிங்கம்**

வீண் கலகம், தொழில் நன்மை, உடல் வியாதி, காரிய தாமதம்.

**கன்னி**

மரியாதைக் குறைவு, காரிய தாமதம், அற்பர் உறவு, மனச் சஞ்சலம்.

**துலாம்**

காரிய நன்மை, கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை, தனலாபம்.

**விருச்சிகம்**

தர்மம், திடீர் நன்மை, வாக்கு பகை, முயற்சி தாமதம்.

**தனுசு**

ஜனவசியம், முயற்சி விருத்தி, சுகவாழ்வு, தொழில் நன்மை.

**மகரம்**

பிரயாணம், காரிய தாமதம், துயரம், தந்தை வழி உறவு.

**கும்பம்**

சென்ற இடத்தில் செல்வாக்கு, தனலாபம், தொழில் சிந்தை, மனப் பதட்டம்.

**மீனம்**

உற்சாகம், தொழில் லாபம், நல்ல நிகழ்வு, பிறர் உதவி.

[பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது]

வளவன்

## தரம்- 1இல் உள்ள கிராம அலுவலர்களுக்கு நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தரம்- 1 இல் உள்ள கிராம அலுவலர்க்கான, திறமையின் அடிப்படையில் அதி சிறப்பு பிரிவுக்கு பதவி உயர்த்தும் நேர்முகப் பரீட்சை எதிர் வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் தேசிய அடையாள அட்டை, உத்தியோக அடையாள அட்டை. கிராம அலுவலர் தரம்-1க்கு நியமித்த நியமனக் கடிதம் ஆகிய ஆவணங்களுடன் வருகை தருமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார்.

(செ-106)

## கட்டாயக் கல்வியை வலியுறுத்தும் விதத்தில் தெருக்கூத்து

(ஏழாலை)

கட்டாயக் கல்வியை வலியுறுத்தும் வகையிலான தெருக்கூத்து நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம், சுன்னாகம், மருதனார் மடம் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்டது.

மல்லாகம் மகா வித்தியாலயத்தில் கட்டாயக் கல்வித் திட்டத்தின்கீழ் கல்விபயிலும் மாணவர்களாலேயே இத் தெருக் கூத்து நடத்தப்பட்டது.

கல்வியின் முக்கியத்துவம், அதனால் அடையும் நன்மைகள் பற்றி இத் தெருக் கூத்து மூலம் விளக்கப்பட்டது.

(செ-12)

## நிற்சாமம் பாடசாலைக்கு புதிய சுற்று மதில்

(யாழ்ப்பாணம்)

சங்கானை கிழக்கு நிற்சாமம் விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கென சுற்று மதில், குடிநீர் வசதி, பூங்கா என்பன அமைக்கப்பட்டுள்ளன.

05ஆம் தரத்திற்குஉட்பட்ட இப் பாடசாலையின் அபிவிருத்திப் பணிகள் வலிகாமம் கோட்டப் பணிப்பாளர் எஸ். இராசையா மற்றும் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய முன்னெடுக்கப் பட்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி எஸ். ஸ்ரீபிரபாகரன், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இப் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதே வேளையில் இப் பாடசாலையின் முற்றப் பணி மற்றும் அபிவிருத்திக்கென இப் பகுதியைச் சேர்ந்த நலன் விரும்பிகள் 22 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளமை குறித்து பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

(க)

## இன்று ஒரு தகவல்

# தலைச்சுற்றல்வருவது ஏன்?

சார்! காலையில் எழுந்ததிலிருந்து தலை சுற்றிக் கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொண்டே ஒருவர் வந்தார். நிமிர்ந்து பார்த்தேன். அவர் தலை சுற்றவில்லை அப்படியேதானிருந்தது. தலை நேராகத்தானே சார் இருக்கின்றது என்றேன். உங்களுக்கு என்ன சார்! கிண்டலாகத்தான் இருக்கும். அந்தந்த அவஸ்தை அவரவருக்கு வந்தால்த்தான் தெரியும் என்றார் அவர். அது இருக்கட்டும் சார்! தலை கிறுகிறுப்பாக இருந்தால் அதற்கு ஏன் என்னைத் தேடிக் கொண்டு வந்தீர்கள்? என்று கேட்டேன். எல்லாம் காரணமாகத்தான் வந்திருக்கிறேன் அதைப் பின்னர் சொல்லுகிறேன். இப்போது நீங்கள் எனக்குச் சொல்லுங்கள் என்றார். என்ன சொல்ல வேண்டும் என்றுகேட்டேன், தலைச்சுற்றல் வருகிறதுக்கு என்ன காரணம் என்று கேட்டார்.

உடம்புக்குள்ளே ஏதோ கோளாறு என்பதை நமக்கு முன்கூட்டியே தெரிவிக்கிற ஓர் அறிவிப்புதான் இது. இரத்த அழுத்தம் (B.P) இரத்தக் கொதிப்பு என்று சொல்கிறோமே அது நமது உடம்பில் இருக்கிறதா என்று சோதனை செய்து பார்க்க வேண்டும். இதனால் தலைச்சுற்றல் வந்ததென்றால் ஆகாரத்தில் உப்பைக் குறைத்துக் கொள்வது நல்லது. இரத்தக் குழாய் தடித்துப் போயிருக்கிறதாகத் தெரிகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே கொழுப்பு, இனிப்பு போன்றவைகளை ஒதுக்கி விடுங்கள். அதன்பின்பு இன்னொரு விஷயம் உங்களுக்குப் புகை பிடிககிற பழக்கம் உண்டா? புகையிலை போடுகிற பழக்கம் உண்டா? மதுப் பழக்கம் உண்டா? இப்படியெல்லாம் இருந்தால்கூடத் தலைச்சுற்றல் இருக்கும். அந்தப் பழக்கங்களை விட்டுவிட்டால் இந்தத் தொந்தரவு இருக்காது.

இந்த உலகம் சுற்றிக் கொண்டே இருக்கிறதென்று ஒருவர் உங்களிடம் வந்து சொன்னால், உடனே அவர் பெரிய விஞ்ஞானியென்று நினைத்து விடாதீர்கள். ஏனென்றால் தண்ணி போட்டிருக்கிறவர்கூட அப்படித்தான் சொல்லுவார். சிலருக்குப் பித்தத்தினால் தலை சுற்றுகிறது உண்டு. இதற்கு நமது வீட்டிலேயே மருந்து இருக்கிறது. தயார் செய்து சாப்பிட்டால் சரியாகிவிடும். வேறு ஒன்றுமில்லை இஞ்சிச் சாறு அரை அவுன்ஸ், தேன் அரை அவுன்ஸ் இரண்டையும் கலந்து சாப்பிட்டுக் கொண்டு வந்தால் சரியாகிவிடும்.

இரசாயன தொழிற்சாலையில் வேலை பார்க்கிற சிலருக்கு அங்குள்ள நெடி ஒத்துக் கொள்வதில்லை. அதனால் தலையில் ஒரு கிறுகிறுப்பு தெரியும். சிலருக்கு எதற்கெடுத்தாலும் உடனே தூக்க மாத்திரை அல்லது தலைவலி மாத்திரை தேவைப்படும். தூக்க மாத்திரை-தலைவலி மாத்திரைகளை அதிகமாக உபயோகிக்கிறவர்களுக்கும் தலைச்சுற்றல் வரும். அடிக்கடி இந்த மாத்திரைகளைத் தேடிச் சுற்றுகிற பழக்கத்தை விட்டு விட்டால் தலைச் சுற்றலும் விட்டுவிடும்.

சிலருக்கு நரம்புகள் மிகவும் பலவீனமாக இருக்கும். அவர்களுக்கும்கூட இந்த தொந்தரவு இருக்கும். நரம்புப் பலவீனத்தை சரி செய்து விட்டால் இந்த தொந்தரவும் சரியாய் விடும். அதுசரி! அதற்கு என்ன செய்வது? கவலைப் படாதீர்கள்! அதற்கும் ஒரு வைத்தியம் கைவசம் இருக்கிறது. என்னவென்று கேட்கிறீர்களா? மாதுளம் பூவைக் கொஞ்சமாக எடுத்து நன்றாக இடித்துச் சாறு எடுத்து அத்துடன் சம அளவில் தேன் கலந்து சாப்பிட்டால் நல்ல குணம் கிடைக்கும்.

ஆகவே, தலை சுற்றல்-கிறுகிறுப்பு இருந்ததென்றால் அதற்குக் காரணம் என்ன என்பதை முதலில் கண்டு பிடிக்க வேண்டும். அதன் பின்னர் அதைநிறுத்துவதற்கு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். அது தான் முறை. உடம்பு நன்றாக இருந்தாற்றான் மனதும் உற்சாகமாக இருக்கும். அதனால் கெட்ட பழக்க வழக்கங்களை விட்டுவிட்டால் வாழ்நாள் முழுவதும் தொந்தரவு இல்லாமல் சுறுசுறுப்பாக இருக்கலாம், இவ்வளவு விவரத்தையும் என்னிடம் வந்த அந்தத் தலைச்சுற்றல் ஆசாமியிடம் சொல்லி முடித்தேன்.

''கடைசியாக, உங்கள் தலை சுற்றலுக்கு மூலகாரணம் என்ன என்கிறதை உங்களால் கண்டுபிடிக்க முடிகிறதா என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்'' என்றேன் ''அதை எப்பவோ கண்டுபிடித்து விட்டேன்... அதனால் தான் உங்களைத் தேடிக் கொண்டு வந்தேன்'' என்றார் அவர். ''எவ்வளவு காலமாக இது உங்களுக்கு இருக்கிறது'' என்றேன் ''ஆறு மாதமாக இருக்கும்'' என்றார். ''அப்படியென்றால் ஆறு மாதமாகப் புகைப்பிடித்துக் கொண்டு வருகிறீர்களா? என்றேன். இல்லையென்றார். ''புகையிலையைப் போடுகிறீர்களா?'' என்றேன். இல்லையென்றார், ''பின்னே வேறு என்ன தான் செய்கிறீர்கள்'' என்று கொஞ்சம் சத்தமாகக் கேட்டேன், ''கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் ''இன்று ஒரு தகவல் கேட்டுக் கொண்டுவருகிறேன் சார்!'' என்றார். □

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# பொதுப் பரீட்சைகளுக்கு தே.அ. அட்டை அவசியம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் பொதுப் பரீட்சைகளுக்கு சமுகமளிக்கும் போது தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்குதேசிய அடையாள அட்டைகளை மாத்திரமே பயன்படுத்த அனுமதி வழங்கப்படும் என கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நடைமுறை 2003ம் ஆண்டு முதல் நடை முறைப் படுத்தப் படவுள்ளதால்பாடசாலை அதிபர்கள் தமது மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கல்வித்திணைக்களம் அதிபர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தங்கள் ஆள் அடையாளத்தை நிரூபிக்க அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படம், அல்லது அஞ்சல் அறிமுக அட்டைகளைப் பாவிப்பதுகுறிப்பிடத்தக்கது.

(வ)

## மலசலகூடத் தொகுதி திறந்துவைப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைஇந்துமகா வித்தியாலயத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்ட மலசல கூடத் தொகுதி ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

(செ-223)

# இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் தைரியம் ஜே.வி.பிக்கு உண்டா?

## சந்திரசேகரன் எம்.பி. கேள்விக்கணை!

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு உறுதியானதீர்வொன்றைமுன்வைக்கும் தைரியம் ஜே.வி.பியிடம் இருக்கிறதா?

இவ்வாறு மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி. சந்திரசேகரன் ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்சவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக்குவந்த போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இந்நிலையில் சந்திரிகாவின் அரசோடுகூட்டுச்சேர்ந்துள்ள ஜே.வி.பியிடம் சில விபரங்களை முன்வைப்பதாகத் தெரிவித்து சந்திரசேகரன் எம்.பி விமல்வீரவன்சவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில்,

அமைச்சரவையின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தி அமைச்சர்களைக்குறைப்பதை பெரும் சாதனையாக சொல்லிக் கொண்டிருக்கின்றீர்கள்.

எனினும் அமைச்சர் பதவியை இழந்தவர்கள் அதே அந்தஸ்துடனும் அரச சொத்துக்களைப் பயன்படுத்திய வாறுசுகபோகமாக,ஆடம்பரமாக வாழ்க்கை நடத்துகின்றனர். இதனை மக்களுக்கு ஒரு போதும் மறைக்க முடியாதென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ)

## நன்னீர்க் கிணறு மீளவும் பாவனை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை புங்கன் குளப் பகுதியில் உள்ள நன்னீர்க்கிணறுமீளவும்பொதுமக்கள் பாவனைக்காக விடப் பட்டுள்ளது.

இதுவரை காலமும் இக் கிணறுபடையினரின்பாவனையிலேயே இருந்துவந்தது,

இப் பகுதிப் பொது மக்கள் சம்பந்தப்பட்ட படையினருடன் கலந்துரையாடியதன் மூலமே இக்கிணறு மீளவும் மக்கள் பாவனைக்கு விடப் பட்டுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது, (செ-223)

## ஆலோசனைக் கூட்டம்

(மந்திகை)

யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மூல வள அபிவிருத்திநிலையம் அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று பிற்பகல் 2-00 மணிக்கு யாழ்.பரியோவான்தேவாலய சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டக் கல்விவலயங்களைச் சேர்ந்த ஆரம்ப பிள்ளைப் பருவ உதவிக்கல்விப் பணிப்பாளர்களையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது, (செ-23)

## போலியோ சொட்டு மருந்து

(புலோலி)

வடமராட்சிப்பிரதேசத்தில் 38 நிலையங்களில் 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கான போலியோ சொட்டுமருந்து வழங்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்றன.

பெரும்பாலான பெற்றோர்கள் நண்பகலுக்கு முன்னரே சிறுவர்களுக்கு போலியோ சொட்டு மருந்தைப்பெற்றுக் கொடுப்பதில் அதிக ஆர்வம் காட்டியிருந்தனர். (க-52)

## விரிவுரையாளர் இடமாற்றம்

(செம்பியன்பற்று)

பலாலிஆசிரியர் கலாசாலையில் நீண்டகாலமாக சேவையாற்றிவந்தநான்கு சிரேஷ்ட விரிவுரையாளர்கள் கோப்பாய் ஆசிரியகலாசாலைக்கு கடந்த வெள்ளிக்கிழமை முதல் இடமாற்றம்பெற்றுச் சென்றுள்ளனர்.

இதனால் இதுவரைகாலமும் கோப்பாய் ஆசிரியர்கலாசாலையில் நிலவிவந்த விரிவுரையாளர் பற்றாக்குறை ஓரளவுகுறையுமென கோப்பாய்ஆசிரிய கலாசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(செ-42)

# வடமராட்சிப் பகுதி நலன்புரி நிலையங்களில் மலசல கூடம் அமைப்பு

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியிலுள்ள நலன்புரி நிலையங்களில் பட்டினிக்கெதிரான அமைப்பினால் 35 மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு வருவதாக அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர்தெரிவித்துள்ளார்.

இவ்வகையில் பருத்தித்துறை முகாமில் 10 மலசலகூடங்களும்,பொலிகண்டி முகாமில் 8 மலசல கூடங்களும், தும்பளை வடமேற்கு முகாமில்9 மலசல கூடங்களும், கட்டைவேலி முகாமில் 2 மலசல கூடங்களும் செங்குந்தான் முகாமில் 6 மலசலகூடங்களும் அமைக்கப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-23)

# வர்த்தகரிடம் பணம் அபேஸ் கொள்ளையர் கைவரிசை

## வடமராட்சியில் சம்பவம்

(புலோலி)

வர்த்தகரொருவர் இரவு நேரம் கடையைப் பூட்டி விட்டு நண்பரொருவருடன் வீடு சென்று கொண்டிருந்த போது திடீரென சுற்றி வளைத்த கொள்ளைக் கோஷ்டி யொன்று வர்த்தகரிடமிருந்து சுமார் 25. 000 ரூபாவைக் கொள்ளையடித்ததுடன் இரு சைக்கிள்களையும் பறித்துக்கொண்டு தலைமறைவாகியுள்ளது.

மந்திகை சந்தைக்கு முன்னால் கடைவைத்திருக்கும் எஸ். கதிர்காம நாதன் என்பவரிடமே இக் கொள்ளைக் கோஷ்டியினர் மொறாவிலில் வைத்து பணத்தை கொள்ளையடித்ததுடன் சைக்கிளையும் பறித்துச் சென்றுள்ளனர்.

இக் கொள்ளை சம்பந்தமாகப் பருத்தித்துறைப் பொலிஸில் புகார் செய்யப் பட்டுள்ளது. (க-52)

## பன்டேஜ் துணிகளுக்கு தட்டுப்பாடு

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மருந்து கட்டும் ''பன்டேஜ்'' துணி வகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் வெளிநோயாளர் பகுதியில் மருந்து கட்டவரும் நோயாளிகள் பன்டேஜ் துணிகளைத் தனியார் மருந்துக் கடைகளிலே வாங்கி வருமாறு கூறப்படுகின்றனர்.

(க-52)

# மக்களின் மனங்களை வெல்வதே உடனடிப்பணி

(யாழ்ப்பாணம்)

மக்களின் மனங்களைவென்றெடுப்பதும், எதிர்காலம் குறித்த நம்பிக்கையை கட்டி எழுப்புவதும்.மக்களை அரசியலில் பங்காளிகளாக்குவதும் தான் எமது அமைச்சின் உடனடிப்பணியாக இருக்கும். இதனை ஜனாதிபதிக்குத் தெளிவாக எடுத்துரைத்துள்ளேன். இவ்வாறு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அபிவிருத்தித் தொண்டர்களின் இணைப்பாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், அரசாங்க அதிபர், பிரதேச சபைத் தலைவர்கள், மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் தலைமையுரையாற்றிய அமைச்சர் மேலும் கூறுகையில்,

தொடரும் அழிவுகளைத் தடுத்து நிறுத்தி ஆக்கபூர்வமான அபிவிருத்திப பணிகள் முன்னெடுக்கப்படுவதற்கு நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது அவசியமானதாகும். இதற்கு அரசாங்க அதிகாரிகள முழு அளவில் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு ஆகும் எனவும்குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் அபிவிருத்தித் தொண்டர்களின் பயிற்சி நிலையங்களில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாக வடக்கு -கிழக்கு தமிழ் விவகாரங்கள அமைச்சின் பணிப்பாளர் நல்லையாஅவர்களால் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டதுடன் இப் பிரச்சினைகள் தொடர்பான தீர்வுகளும் முன் வைக்கப்பட்டன எனபது குறிப்பிடத்தக்கது. (க)

## சிந்தனைக்கு விருந்து

### நெல்லுக்கு உமியளித்தவன்

எந்தை தவிடந்தே ஏற்றான்நெல் லாதலினால்
நிந்தை சொலப்பெற்றான் நீள் புவியில்— எந்தையினை
நல்லவனாய் மக்கள் நயக்கவே நான்உமியை
நெல்பெற் றளிப்பேன் நிதம்.

'பழையவன்'

தற்கொலைத் தாக்குதல்

# அமெரிக்கா பதிலடி கொடுத்தாலும் பொது மக்கள் பாதிக்கப்படக் கூடாது

## ஐ. நா. செயலர் தெரிவிப்பு

(நியூயோர்க்)

அமெரிக்க நகரங்கள் மீது நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தற்கொலைத் தாக்குதலிற்கு அமெரிக்கா பதிலடி கொடுத்தாலும் கூட பொது மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதில் கண்டிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகிறது.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான் பிரான்ஸ் பத்திரிகை ஒன்றிற்கு பேட்டியளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்;

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில், சகல சமூகங்களுக்கும் விரோதிகள் உள்ளனர் என்பதை உலகம் புரிந்து கொள்ள வேண்டும். இதை மதம், தேசிய இனம் என்ற பதங்களால் வர்ணிக்க முடியாது.

சில தீவிரவாத குழு புரிந்த தீய செயலுக்காக எந்த மக்களோ எந்த மதத்தினரோ எந்த பிராந்தியமோ இலக்காகக் கூடாதென்று அவர் மேலும் தெரிவித்தார்.

(க-04)

அமெரிக்காவிற்கு எதிராக

# இந்தோனேஷியாவில் பெரும் ஆர்ப்பாட்டம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானுக் எதிராக அமெரிக்கா இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒசாமாபின் லேடனை குற்றம் சாட்டியதற்கும் எதிராக நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் இந்தோனேஷியாவில் பெரும் ஆர்ப்பாட்டத்தினை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

அமெரிக்க பொருட்களைப் பகிஷ்கரிக்குமாறு எழுதப்பட்ட சுலோக அட்டைகள், பதாகைகள் என்பவற்றை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தை நடத்திவருகின்றனர்.

அமெரிக்க உற்பத்திகளையோ அல்லது யூத உற்பத்திகளையோ கொளவனவு செய்வது முஸ்லிம் மக்களை சுட்டுக் கொல்வதற்கு ஆயுதம் வாங்குவது போலான செயலாகும் எனவும்உலகில்உள்ள அனைத்துமுஸ்லிம்களும்அமெரிக்காவுக்கெதிராகவும் முஸ்லிம்களின் உரிமைக்காகவும் போராட வேண்டும் எனவும் அவர்கள் கோஷித்து வருகின்றனர். (செ-7)

உரத் தொழிற்சாலை தீ விபத்தில்

# பலியானோர்எண்ணிக்கை 25 ஆக அதிகரிப்பு

(பாரிஸ்)

பிரான்ஸின் இரசாயன உரத் தொழிற்சாலையில் இடம் பெற்ற வெடி விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 25ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் பிரான்ஸின், ருருட்ஸ் பகுதியில் அமைந்துள்ள இரசாயனத் தொழிற்சாலையில் தற்செயலாக வெடி மருந்து வெடித்ததில் 10 பேர் பலியானதாகவும், 200 இற்கும் அதிகமானோர் காயமடைந்ததாகவும் முன்பு வெளியான செய்திகள் தெரிவித்தன.

பின்பு வந்த செய்திகள் மேலே குறிப்பிட்ட தொகையினர் பலியானதாகவும் காயமடைந்த மற்றும் மயக்கமடைந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்து 800 ஆக உயர்ந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

இவர்களில் 650 பேரின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு இரசாயனங்களை ஒன்றாக கலக்கும் போது ஏற்பட்ட தவறுதலே இவ்விபத்திற்கு காரணம் என்று தெரிவித்த பிரான்ஸ் உள்துறை அமைச்சர். இறந்தவர்களின் தொகை இன்னும் அதிகரிக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-7)

## செய்திப்பரல்

★ காஷ்மீரில் இந்தியப் படைக்கு எதிராக தாக்குதல்களில் ஈடுபட்டு வந்த ஆப்கானியர்கள் நாடு திரும்புவதாக இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

★ நியூயோர்க் தற்கொலைதி தாக்குதல் சம்பந்தமாக 33 வயதான ஒருவரை சிக்காகோவிற்கு அருகில் கைது செய்துள்ளனர்.

★ ஜப்பானில் 48 ஆயிரம் அமெரிக்கப் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

★ அமெரிக்காவின் போர் நடவடிக்கைகளுக்கு இராணுவத் தளங்களை வழங்க ஸ்பெயின் முன்வந்துள்ளது.

★ அமெரிக்க மீதான தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் எப். பீ. ஐ. ஏஜண்டுகள் அங்குள்ள முஸ்லிம்களையும், அராபியர்களையும் இம்சித்து வருகின்றனர். (க-03)

## உலக தரிசனம்

# ஒஸாமா பின்லேடனுக்கு கேரளத்தில் ரசிகர் மன்றம்

[சென்னை]

இந்தியாவின் கேரள மாநிலத்தில் சர்வதேச தீவிரவாதி எனக் கருதப்படும் ஒஸாமா பின்லேடனுக்கு ரசிகர் மன்றம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இம்மன்றத்தை அங்குரார்ப்பணம் செய்த பின்னர் மன்றத்தினர் தொலைபேசி மூலம் இந்தியப் பத்திரிகை ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாம் யாரென்று குறிப்பிடாது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட மன்றத்தினர் பின்லேடன் ரசிகர் மன்றத்தை தொடக்கியதால் ஏற்படும் எந்தவித நடவடிக்கைகளுக்கும் மற்றும் சர்வதேச அழுத்தங்களுக்கும் தாம் தயார் எனக் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இது பற்றி தெரிய வருவதாவது;

அமெரிக்க நியூயோர்க் மற்றும் வாஷிங்டன் கட்டடங்களை பயங்கரவாத செயலினால் தாக்குதல் புரிந்தவர் ஒஸாமா பின்லேடன் அவரை வீரதீரனாக சித்தரிக்கும் சுவரொட்டிகள் கேரள மாநில பொன்னா நகர் பகுதிகளில் அதிகமாக ஒட்டப்பட்டிருந்தது அவற்றை பொலிஸார் கிழித்து அப்புறப்படுத்தியுள்ளனர்.

இதே வேளை ஒஸாமா பின்லேடனுக்கு ஆதரவு வழங்கும் அமைப்புக்கள் கேரளத்தில் உருவாகி வருவதை உளவுப் பிரிவினர் கண்காணித்து வருவதாகவும் இதற்கென ஒரு புலனாய்வுப் பிரிவினர் விசேடமாக தயார்படுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-7)

# இஸ்ரேல்மீதான தாக்குதல் நிறுத்தப் பட்டுள்ளது

## கமாஸ் தீவிரவாத அமைப்பு தெரிவிப்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேலுக்குள் மேற்கொள்ளும் தற்கொலைகுண்டுத் தாக்குதலை தாங்கள் நிறுத்தியுள்ளதாக கமாஸ் தீவிரவாத அமைப்பினர்தெரிவித்துள்ளனர்.

பலஸ்தீன மக்களினதும் இஸ்ரேல் மக்களினதும் நலத்திற்காகவே தாங்கள் இத்தாக்குதலை நிறுத்தியுள்ளதாகவும் அவ்வமைப்பின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் இஸ்ரேல் தமது அமைப்பின் மீது தாக்குதல் நடத்தாத பட்சத்தில் இது சாத்தியமாகும் எனவும் இஸ்ரேல் தாக்குதல்ஏதும் நடத்துமானால் பெரும் இழப்பை அது காண வேண்டி நேரிடும் எனவும் கமாஸ் அமைப்பின் சிரேஷ்ட அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை அடுத்தவாரம் இடம்பெறவுள்ள இஸ்ரேல் பலஸ்தீன சமாதானப் பேச்சுக்கு இருதரப்பும் அமைதியைப் பேணவேண்டுமென அமெரிக்கஇராஜாங்க அமைச்சர் கொலின்பவல் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே கமாஸ் அமைப்பு இவ்வறிவித்தலை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-7)

# ஆசிய,பசுபிக் மாநாடு சீனாவில் அடுத்தமாதம்

## அதிபர் புஷ் கலந்துகொள்வார்

(பீக்கிங்)

சீனாவில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள 9 ஆவது ''ஆசிய பசுபிக் பொருளாதாரக் கூட்டமைப்பின்'' மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் கலந்து கொள்ளவுள்ளதாக பீங்கிங் செய்திகள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் ஒக்டோபர் 20 ஆம் 21 ஆம் திகதிகளில் சீனாவின் ஹங்காய் நகரில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் ஆசிய பசுபிக் பொருளாதாரக் கூட்டமைப்பின் 21 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கு பற்றவுள்ளார்கள்.

இதே சமயம் இந்நிகழ்வில் தான் கலந்து கொள்வதை, சீன அதிபர் ''ஜிஜோங்கிங்'' குடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உறுதி செய்துள்ளார்.

''ஆசிய பசுபிக் பொருளாதாரக் கூட்டமைப்பு மாநாட்டின் பின் ''சீனாவின் அதிபர் ''ஜிஜோங்கிங்'' குடன் அமெரிக்க அதிபர் உத்தியோகபூர்வ பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடும் எனவும் சீன வெளியுறவுப் பிரிவின் செய்திப் பிரிவு தெரிவித்துள்ளது. (செ-7)

ஆப்கான் மீதான அமெ. தாக்குதல்

# குறித்த இலக்கில் இடம்பெற வேண்டும்

## ஐ. நா. அதிகாரி தெரிவிப்பு

(லண்டன்)

அப்பாவி மக்களை பாதுகாப்பதற்காக ஆப்கானிஸ்தான் மீது நடத்தப்படக் கூடிய பதில் தாக்குதல்கள் எவையும் மிக நன்றாக இலக்கு குறிக்கப்பட வேண்டுமென்று ஐ.நா. வின்சிரேஷ்ட மீட்புப்பணி அதிகாரி றுட் லுப்பேர்ஸ் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 21ஆண்டுகளாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டும் அதேவேளை கடந்த 30 வருடங்களில் ஏற்பட்டிராத மோசமான வரட்சியினால் பாதிக்கப்பட்டும் உள்ள ஆப்கானிஸ்தான் மக்கள் பெரும் உணவுத் தட்டுப்பாட்டிற்கும் முகங்கொடுத்துவருகிறார்கள்.

அத்துடன், ஆயிரக்கணக்கான சாதாரண மக்கள் நகரங்களிலிருந்து இடம்பெயர்ந்து பாகிஸ்தானின் எல்லையோரங்களில் வந்து ஒதுக்கிடம் தேடிவருகிறார்கள் என்றும் 'இப்போது நடப்பவைகளின் பின்விளைவுகளை நோக்கினால் அப்பாவிக்குடிமக்கள் பலருக்கு பேரழிவு தான் என்றும் அவர் கூறியுள்ளார். (உ)

# ஓராண்டு நிறைவும் வாடிக்கையாளர் தினமும்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மக்கள் வங்கியின் ஓராண்டு நிறைவும் வாடிக்கையாளர் தினமும் மாணவர் மலர்ச்சி (சிசு உதான) மற்றும் குழந்தைகளின் சேமிப்பு (இசுறு உதான) கணக்குகளிற்கான சேமிப்பு ஊக்குவிப்பு பரிசில் வழங்கும் வைபவமும், கடந்த 19 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு அச்சுவேலி புனித தெரேசாள் கல்லூரி மண்டபத்தில் அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் மு. சிவநேசன் தலைமையில் நடைபெற்றது;

இந்நிகழ்வில் பிரதமஅதிதியாகமக்கள்வங்கியின்வடவலய உதவிப் பொது முகாமையாளர் சி.இளம்பிறைநாதன், சிறப்பு அதிதிகளாக மக்கள் வங்கியின் யாழ் பிராந்திய முகாமையாளர் த. சிவபாதம். அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் திருமதி கனகராசா, புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அதிபர் அருட் சகோதரி றொசாரியோ வலிகிழக்குப் பிரதேச சபைத் தலைவரி பூ. குணசிங்கம் வலிகிழக்கு தென் பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க. கிருஷ்ணராசா ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்;

மேலும் இந்நிகழ்வில் அச்சுவேலிப்பிரதேசத்தைச்சேர்ந்த பல்வேறு பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களும் பெரும் எண்ணிக்கையிலானவங்கி வாடிக்கையாளர்களும்கலந்துகொண்டனர்;

சுமார் 150 பாடசாலை மாணவர்களுக்கான ரூபா 1200 பெறுமதியான ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன. மேலும் 50 குழந்தைகளுக்கான சேமிப்பு ஊக்குவிப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன; (க)

# உடன் தொடர்புகொள்க

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இராணுவத்தால் கைதாகி காணாமற் போனவர்களுக்கான ஆட்கொணர்வு மனு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால் கீழ்க்குறிப்பிடப்படுவோர்களை மணியம் கட்டடத்தில் இயங்கும் மனித கௌரவத்திற்கான மன்றத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு இணைப்பாளர் ஐ. சிவராஜா கேட்டுள்ளார்;

★ நாகராசா திலகவதி வயற்கரை மீசாலை, வடக்கு

★ மகேந்திரன் தவமணி செருக்கன்புலம் சுழிபுரம்

★ எஸ். ஜெயபாலசிங்கம் சின்னத்தம்பி இராசையா கைதடி வடக்கு, கைதடி;

[செ]

# சைக்கிள் காவல்நிலையத்தில் ஒப்படைப்பு

(இருபாலை)

கோப்பாய்டச்சுவீதிப்பகுதி பற்றைக்குள் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட சைக்கிள் ஒன்றுமீட்கப்பட்டுகிராம அலுவலரின் ஊடாக கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(செ.221)

# புனரமைப்பு பணிகள் துரிதகதியில்

(துன்னாலை)

கரவெட்டிப்பகுதியில்தச்சை ஐங்கரன் சனசமூக நிலையம் நவசக்தி சனசமூகநிலையம்ஆகியவற்றின்புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

(செ-41)

பிரித்தலும் பேணிக்
கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும்வல்லது
அமைச்சு
-குறள்

வலம்புரி

## நம்பிக்கை எதுவரை?

ஆளும் பொதுஜன முன்னணிக்கு எதிராக ஐ.தே. கட்சி மீண்டுமொருமுறை நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வரவுள்ளது. ஏற்கனவே நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வர ஐ.தே.க முனைந்தபோது ஜனாதிபதி சந்திரிகா ஜே.வி.பியுடன்கூட்டுச்சேர்ந்து நம்பிக்கையில்லாப் பிரேரணையின் தாக்குதலில் இருந்து தப்பினார்.

ஐ தே.க. முதற்தடவையாக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்தபோது, அக்கட்சிக்குச் சாதகமான களநிலை காணப்பட்டது. எனினும் பாரதப்போரில், பாண்டவர் பக்கம் கண்ணபிரான் இருந்து உதவியது போல் அதியுத்தமர் ஜே. ஆர் 78களில் தயாரித்த நிறைவேற்று அதிகாரங்கள் கண்ணபரமாத்மா போல் ஜனாதிபதிசந்திரிகாவுக்கு உதவியது. இதனால்அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் ஆவி அரங்கேறாமலே துறந்தது.

இப்போது மீண்டும் இரண்டாவது தடவையாக நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐ.தே.க கொண்டு வரவுள்ளது இதில் வியப்பதற்கோ அன்றி விழிப்பதற்கோ ஒன்றுமில்லை. ஆனால், சுதந்திர ஆணைக்குழு மீதான விவாதம் இடம் பெற்று அது பாராளுமன்றில் நிறைவேறிய பின்பே நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதென ஐ.தே.கட்சிமுடிவு செய்துள்ளது. நம்பிக்கையில்லாத ஒரு அரசினை சுதந்திர ஆணைக்குழுவை அமைப்பதில் மட்டும் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். என்பதுடன், நம்பிக்கையில்லாத அரசின் ஆதரவோடு கொண்டு வரப்படும் ஆணைக்குழு எந்தளவு தூரம் நம்பிக்கையுடையதாக இருக்கும்?

இதுவெல்லாம்விவாதத்திற்குரிய விடயம். ஆனால் ஒருவனை குற்றவாளியென இனங்கண்டு மரணதண்டனை விதித்துவிட்டு அவனால் ஆகக் கூடிய ஓர் கருமத்திற்காக மரணதண்டனையை ஒத்திவைக்கும் நடவடிக்கை எந்தளவு தூரம் நியாயமானது?

இது போன்றுதான் ஐக்கிய தே. கட்சி கொண்டு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையும்.

நாட்டுக்கும், ஆட்சிக்கும் நம்பிக்கையற்ற அரசை உடனடியாக வெளியேற்றுவதைவிடுத்துஅதில் கறக்கக் கூடியதை கறந்து வெளியேற்ற நினைப்பது ஐ.தே.கவின் நியாயமற்ற போக்கையே காட்டுகிறது.

# ஆத்மீக, பண்பாட்டின் அடிப்படையில் அமைந்த தன்னலமற்ற, தியாக வாழ்வே உன்னதமானது

இன்றைய காலகட்டத்தில் கலாசாரம், பண்பாடு என்பவற்றில் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன; ஆத்மீக பண்பாட்டின் அடியாதாரமான கருத்துக்கள் திரிக்கப்பட்டு வேறுவடிவம் பெற்றுள்ளமை குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

ஆத்மீகம் என்பது கூட தற்காலத்தில் வியாபாரமாகி விட்டது; சடங்காசாரங்களும்,பகட்டான வழிபாடுகளும்,மிகுந்து போயுள்ளமையைக் காணமுடிகிறது, எனினும் ஒவ்வொரு மனிதனிலும் தெய்வீகம் உண்டென்பதுவும் அத் தெய்வீகம்வெளிப்பட்டுத் தோன்ற முடியும் என்பதும் உண்மையேயாகும்;

### வேடமும் ஆடம்பரமும்

கோயில்களில் அரோகரா என்று கத்துவதும், கற்பூரங்களை எரிப்பதும் கோயில்களைப் புனருத்தாரணம் செய்கின்றேன் என்ற பெயரில் ஆடம்பரமாக செலவிடுவதும் உண்மையான வழிபாடுகளாகா. மச்சாளும் கும்பிட்டாள்,நானும் கும்பிட்டேன் என்ற பாணியில் நின்ற இடத்திலேயே சுற்றுவதும் மற்றவர்கள் வழிபாடாற்ற முடியாத வகையில் மூண்டியடிப்பதும் ஆத்மீகப் பண்பாடுகள் எனக் கூற முடியாது.

மற்றும் சிலர் காவியுடை அணிந்தும்,தாடி வளர்த்து குடுமி வைத்தும் தாம் ஆத்மீக வழியில் செல்வதாக காட்டிக் கொள்வர். இவை ஆத்மீக வழிபாட்டுப் படிநிலை வளர்ச்சியின் ஒரு கட்டமேயன்றி அவையே வழிபாடு என்றால் பொருந்தாது. ஆனால் உண்மையான ஆத்மீகம் என்பது தியாகம்,தன்னல மறுப்பு (சுயநலமின்மை), தன்னலமற்ற தொண்டுள்ளம்,சேவை போன்ற ஆத்மீக விழுமியங்களுள் பலவற்றை உள்ளடக்கியது.புலன்கள் எப்போதும் 'நானே' முதல் என்கின்றன; ஆனால் நீதி நெறியோ நீ எப்போதும் கடைசி என்கின்றது;

### துறவி யார்?

சங்கற்பத்தை துறவாதவன் யோகியாவதில்லை என்பது கண்ணனின் மொழி. சங்கற்பம் என்பது செயலில் ஈடுபடும் போது கிடைக்கப் போகும் பலன்கள் பற்றிய எண்ணற்ற எண்ணங்களேயாகும். மனம் பலவாறு எண்ணி மானச சஞ்சாரம் செய்கிறது.அதன்பிறகு அந்த எண்ணங்களை ஒருவாறு துடைத்து விட்டு வேறொரு பாங்கில் மனோராஜ்யம் செய்கிறது.இவ்விதம் தோன்றும் கர்மபலன் பற்றிய எண்ணங்களைத் துறந்து விட்டுச் செய்ய வேண்டிய செயலைச் செய்பவனே துறவி என்பது பகவத்கீதையின் உட்கிடையாகும். ஆனால் அதீத நிலையை அடைய வேண்டும் என்று கருதிக் கொண்டு செயலை விட்டு சும்மா இருத்தல் ஆத்மீகம் ஆகாது;

**மு. நாவலன்**

ஆத்மீகம் என்பது ஒற்றைப் பரிமாணம் கொண்டதல்ல: பன்முகத் தன்மை அதற்கு உண்டு.அத்துடன் செல்வத்தாலோ பேர் புகழாலோ, பட்டம் பதவியாலோ அன்றி, மக்கள், மனைவியாலோ மரணமில்லாப் பெருநிலை எய்தப்படுவதில்லை. தியாகத்தாலேயே அப்பெருநிலை எய்தப்படுகிறது என்பதே அறிஞர்களினதும், ஞானிகளதும் ஏகோபித்த முடிவாகும்: தியாகத்திற்கு எடுத்துக் காட்டாக பின்வரும் சம்பவத்தை குறிப்பிடலாம்;

### குரு சீடனுக்கு உபதேசம்

முன்னொரு காலத்தில் குரு ஒருவர் ஆச்சிரமமொன்றை அமைத்து குருகுலக் கல்வியை சீடர்களுக்கு கற்பித்து வந்தார்.ஆத்மஞானம் அடையப்பட்ட அக் குருவிடம் கல்வி கற்க வந்த சீடன் ஒருவன் தனக்கு மெய்ப்பொருள் பற்றிய உண்மையை அறிவதற்கான மந்திரத்தை உபதேசிக்குமாறு கேட்டுக் கொண்டான்.அக் காலத்தில் சீடர்களின் பக்குவ நிலையைக் கண்டுணர்ந்தே உபதேசிப்பது வழக்கமாக இருந்தது; குருவோ சீடனின் வேண்டுகோளை கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை;

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன.சீடன் ஒருநாள் அவர் வரும் வழியில் நிலத்தில் நெடுஞ்சாண்கிடையாக படுத்திருந்தான்.குரு கங்கைக் கரையில் நீராடிய பின் வழக்கமாக வரும் பாதையில் வந்தார்.சீடனின் மேல் தவறுதலாக கால் வைத்து விழும் தறுவாயில் சமாளித்துக் கொண்டு, வாய்விட்டு மந்திரத்தை உச்சரித்தார்: அத்தறுவாயில் சீடன் குருவின் வாய்மொழியாகவே உபதேசம் பெற்றுக் கொண்டான்.குரு சீடனிடம் ''இம் மந்திரத்தை உனக்கு மட்டும் வைத்துக்கொள்ள வேண்டும்: நீ இம்மந்திரத்தை உச்சரித்து இறைவனை உணர்வாயாக என்று கூறியதுடன் பின்வருமாறும் எச்சரிக்கைசெய்தார். எக்காரணம் கொண்டும் நீ பெற்றுக் கொண்ட இம் மந்திரத்தை மற்றவர்களிற்கு கூறுவாயாயின் நீ நரகத்தை அடைவாய் என்றும் இதனை உச்சரிப்பவன் மேலான நிலையை அடைவான் என்றும் குரு சீடனிடம் கூறினார்;

### குருவின் சொல்லைமீறியசீடன்

அந்த ஆண்டு ஒரு பிரபல்யமான கோயில் உற்சவத்தின் போது கோடிக் கணக்கான பக்தர்கள் அங்கு கூடினர்: உடனே அச் சீடன் கோயில் கோபுரத்தின் மேல் ஏறி நின்று கொண்டு பக்தர்களை கூவியழைத்து உற்சாகம் மேலிட ''பக்தர்களே இந்த மந்திரத்தை உச்சரியுங்கள்'' என்று கூவினான்.

அந் நேரத்தில் அங்கு வந்த குரு தனது சீடனை நோக்கி ''இதை நீ உச்சரித்தால் மேலான நிலை அடைவாய் என்றும் ஆனால் பிறருக்கு கூறினாலோ நரகத்தை அடைவாய் என்றும் எச்சரித்தேனே நீ அவதானிக்கவில்லையா'' என்று கேட்டார்;

அதற்கு பதிலளித்த சீடன் பின்வருமாறு கூறினான்; ''மதிப்பிற்குரிய குருதேவா இம் மந்திரத்தை உச்சரிப்பின் நான் மட்டுமே மேலான நிலையை அடைவேன்; ஆனால் இப் பக்தர்களிற்கு நான் கூறினால் கோடிக்கணக்கான பக்தர்கள் மேலான நிலையை அடைவர். இப்போது தங்கள்கட்டளைப்படி நான் ஒருவன் தானே நரகத்திற்கு செல்லப் போகிறேன்; ஆனால், இம் மந்திரத்தை உச்சரித்து கோடிக்கணக்கான பக்தர்கள் ஆத்மீக விடுதலையை அடையப் போகிறார்கள். நான் நரகத்தை அடைகிறேன் பரவாயில்லை. இவர்கள் எல்லோரும் விடுதலையை அடையட்டும்'' என்றான்;

மேற்கூறிய கதை சுயநலமின்மை, தியாகம் என்பனவற்றை குறிக்கும் சிறந்த உதாரணமாகும்; அக்கணமே அச்சீடன் இறை தரிசனம் பெற்று தளைகள் அவிழ்ந்த சுதந்திரத்தை அடைந்தான் என்பதும் வரலாறு.பிறிதோர்கதையையும் நோக்கலாம்;

### தூய்மை அழியாது

புத்தரை அழிக்க முயன்ற எதிரிகள் அவரிடம் வந்து 'நீங்கள் எங்களிற்காக உங்கள் என்புகளைத் தாருங்கள், அதன் மூலம் நாம் நன்மையடைவோம்' என்றனர். கருணையுள்ளம் கொண்ட புத்தர் அதற்கு சம்மதித்து எரியூட்டும் படிதெரிவித்தார்; தீ மூட்டி புத்தரை அதற்குள் கிடத்தினர். அப்போது அசரீரி எழுந்தது'மூடர்களே தூய்மையை என்றும் அழிக்க முடியாது' தூய்மையானவர்கள் ஒரு போதும் சாகமாட்டார்கள்என்றுஅவ்வசரீரிகுறிப்பிட்டது. இதன் மூலம் தன்னல மறுப்பு, தியாகம் முதலிய விழுமியங்கள் வலியுறுத்தப் படுகின்றன; இத்தகைய பண்புகள் தான் தளைகள் கடந்த சுதந்திரத்தை ஏற்படுத்தும்'

தூய எண்ணங்கள் இல்லையாயின் உள்ளம் உலர்ந்து விடும்: நல்ல எண்ணங்கள் அதிர்ஷ்டத்தைத்தர கெட்ட எண்ணங்கள் துன்பத்தைத் தருகின்றன. மீற முடியாத கர்ம விதி இது-பற்றற்று ஆற்றப்படும் வினைகள் எம்மைத் தளைப்படுத்தா. இவையே ஆத்மீக கருத்துக்களின் சாராம்சம் ஆகும்;

### ஆலயங்களின் அவலம்

தற்காலத்தில் சீரிய விழுமியங்கள் மதிப்பிறக்கம் செய்யப்பட்டுஆலயங்கள்கூட வியாபார தாபனங்களாக ஆகி விட்டமையை காணமுடிகிறது. ஆன்மா லயப்படும் இடம் ஆலயம் என்ற நிலை போய் அதிகாரம் செலுத்துதல், ஒற்றுமை இன்மை கோஷ்டி மோதல்கள், வாள் வெட்டுக்கள் இடம் பெறும் இடமாக ஆலயங்கள் திகழ்வது வேதனைக்குரிய விடயமே!

இப்பண்பாட்டுச் சீர்கேடுகளைக் களைய சிறுவயதிலிருந்தே ஆத்மீக பண்பாட்டுக் கல்வியை இளம் சிறார்களிற்கு புகட்ட வேண்டியது அவசியம்; இது பகுத்தறிவிற்கு முரண்படாத விஞ்ஞான அடிப்படையில் அமைதல் வேண்டும். ஏனெனில் உண்மை எப்போதும் பகுத்தறிவு உள்ளுணர்விற்கமைவாகவே அமையுமன்றி அதிலிருந்து முரண்படாது;

### பண்பாட்டுப் பெறுமானம்

பாரத கலாசரம் உயர்ந்த குறிக்கோள்களை உடையது. மாறியும் அழிந்தும் கொண்டிருக்கின்ற பிரபஞ்ச யதார்த்தத்தில் மாறாத அழியாத ஆத்மா பற்றிக் குறிப்பிடுகின்ற ஒன்று என்ற வகையில் இது மேலான விழுமியங்களை உள்ளடக்கியுள்ளது.

இந்தப் பண்பாட்டுப் பெறுமானங்கள் பழமை வாய்ந்தவை, காலாவதியானவை என்று சிலர் கருதக் கூடும். மாறும் சமூக அமைப்பில் மாறும் கருத்தியல்கள் உண்டென்பது உண்மைதான், ஆனால் எல்லோருக்கும் பொதுவான சில இயல்புகள் மாறுவதில்லை; இங்கும் எங்கும் மனிதர்களின் குணாம்சங்களின் அடிப்படை தனித்துவமானதாக உள்ள போதும், பொதுமைப்படுத்திய சில அம்சங்களும் காணப்படுகின்றன: இவ் அம்சங்களை ஆளும் விதியும் பொதுவானவையே,

இவ் விதிகளை அறிந்து வசப்படுத்துவதும், அதனை வாலாயமாக்கி கையாள்வதிலுமே வெற்றி தங்கியுள்ளது. மனிதன் தூல நுண்மையான சேர்க்கையாலனவன் மட்டுமல்ல, மாறாத ஆத்மா என்ற உள்ளத்தையும் உள்ளடக்கியவன், ஆத்மீகமும் விஞ்ஞான ரீதியிலானதே, இவையும் விதிக்குட்பட்டவையே, உண்மை எப்போதும் கைகட்டி நிற்பதில்லை, மாறாக நிற்கும் சமுதாயங்கள் அழிந்தொழிகின்றன, சாம்ராஜ்யங்கள்அழிகின்றன, ஆனால் அழியாப் பொருளை அழிக்க எவராலும் முடியாது. இதுவே மாறாத மாற்ற முடியாத நியதி; எனவே ஆத்மீக பண்பாட்டின் அடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வோமாக.

---

## தினசரி தியானம்

## முறை மாற்றம்

விட்டேன் உலகம் விரும்பேன்
இருவினை வீணருடன்
கிட்டேன் அவருரை கேட்கும்
இரேன் மெய் கெடாத நிலை
தொட்டேன் சுக துக்கமற்று விட்டேன்
தொல்லை நான் மறைக்கும்
எட்டேன் எனும் பரம் என்னிடத்தே
வந்திங் கெய்தியதே;

-பட்டினத்தார்-

போகத்தை நாடுகிற நாட்டம் யோகத்தை நாடுகிற நாட்டமாக என்னிடத்து மாறியமையும்படி ஈசா அருள் புரிவாயாக;

நீர் வீழ்ச்சி என்னும் ஆகர்ஷண சக்தியை மின் சக்தியாக மாந்தர் மாற்றியமைக்கின்றனர். போராட்டத்தை மனிதன் அமைதியாக மாற்ற வேண்டும். காலத்தைக் கடவுள் பக்தியாக்க வேண்டும்: வெறுப்பை அருள் கலந்த இரக்கமாக மாற்றி விட வேண்டும்: அப்பொழுது மனிதன் சான்றோனாக மாறி விடுகிறான்;

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

---

## கொழும்புத்துறை உபதபாலகம் பாண்டியன்தாழ்வில்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கில் இயங்கி வந்த உபதபாலகம் தற்போது பாண்டியன் தாழ்வில் இயங்கிவருகின்றது.

கடந்த வருடம் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இத்தபாலகம் இவ்விடத்திலே இயங்கி வருவதாக உபதபாலக வட்டாரங்கள் தெரிவித்தன,

(கெ-223)

# ஆப்- இருந்து பின்லேடன் தப்பிவிட்டார்
# தலிபான் ஆட்சியாளர்கள் அறிவிப்பு

## தாக்குதலுக்கு அமெரிக்கா தயார் எதிர் கொள்ள புனிதப் போர்

(காபூல்)

அமெரிக்க நகரங்கள் மீது தாக்குதல்நடத்த காரணமாயிருந்தாரென அமெரிக்காவால் குற்றஞ்சாட்டப்படும் ஒஸாமாபின்லேடனைக்காணவில்லையென தலிபான் ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்

ஒசாமா பின்லேடன் இதுவரைஆப்கானில் தங்கியிருந்தார் ஆனால் அவரை நேற்று முதல் காணவில்லை அவர் எங்கு சென்றார்என்றுதெரியவில்லையெனவும் தலிபான் ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்;

ஆனால் பின்லேடன் எங்கு சென்றாலும் ஆப்கானிஸ்தான்மீது தாக்குதல்நடத்தப்படுமென அமெரிக்க ஜனாதிபதிஜோர்ஜ்புஷ்மீண்டும் எச்சரித்துள்ளார்.

ஒஸாமாபின்லேடன் எங்கு இருக்கின்றார்என்பது தலிபானுக்குத்தெரியும் ஆனால் அவர்கள் வேண்டுமென்றே இத்தகவலை வெளியிட்டுள்ளனரென அமெரிக்க பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்;

இதேவேளை ஆப்கான்மீது தாக்குதல் நடத்துவதற்காக அதன் அண்டை நாடுகளில் 350 தாக்குதல் விமானங்கள் நிறுத்தப்பட்டுள்ளன இந்து சமுத்திதிரப் பகுதியில் விமானம் தாங்கிக்கப்பல்களும் நிறுத்தப்பட்டுள்ளன;

இதேவேளை புனிதப் போருக்குத் தாம் தயாரென தலிபான்கள் அறிவித்துள்ளனர். அமெரிக்க படைகளுடன் போரிடுவதற்கு ஒரு இலட்சத்திற்கும் அதிகமானவர்களுக்கு தலிபான் இராணுவத்தினர் அவசர அவசரமாக பயிற்சியளித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

### விடுதலைப் புலிகள் 100வது இதழ் இன்று வெளிவரும்

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் வெளியிடப்படும் ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகையின் 100வது இதழ் இன்று வெளியிடப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளின் நூறாவது இதழில் இலங்கையின்அரசியல் தொடர்பான கண்ணோட்டங்கள் இடம்பெற்றுள்ளன. (ம)

### பயங்கரவாத:.,

பயங்கரவாதிகளுக்கெதிராக அமெரிக்கா மேற்கொள்ளும் யுத்தத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் எந்த வகையிலும் இலக்காக அமைய மாட்டார்கள்;

விடுதலைப்புலிகள் அமைப்புக்கும்,மத்திய கிழக்கு பயங்கரவாத அமைப்புகளுக்கும் இடையில்வேறுபாடுகள் உண்டு என்றும் தெரிவித்த ஸ்ரீபன் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் ஒஸாமா பின்லேடனுக்குமிடையில் எந்த விதமான தொடர்புகளும் இல்லையென்றும் தெரிவித்தார்; (வ)

## சமாசத் தலைவரின் இராஜினாமாவை ஏற்றுக் கொள்வதில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி வி.கே சிவஞானத்தின்இராஜினாமாவை ஏற்றுக் கொள்வதில்லை யென மேற்படி சமாசத்தின் இயக்குனர்சபை தீர்மானித்துள்ளது.

சமாசத் தலைவர்பதவியில் இருந்து இராஜினாமாச் செய்வதாக சி.வி.கே சிவஞானம் அனுப்பி வைத்த கடிதம் தொடர்பாக சமாசத்தின் உபதலைவர் சி. குமாரவேல் தலைமையில் நேற்றுக் கூடிய இயக்குனர்சபை இராஜினாமாவை ஏற்றுக் கொள்வதில்லையென ஏக மனதாக முடிவுசெய்துள்ளது: (ந)

## வாக்கெடுப்பில் இழுபறி நிலை!

அரசியல் அமைப்பின் 17வது திருத்தச் சட்டமூலம் இன்று பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டாலும்,அன்றைய தினம் வாக்கெடுப்பு நடத்துவதா? இல்லையா? என்று அரசாங்கம் முடிவெடுக்க முடியாத நிலையில் தொடர்ந்தும் இழுபறிநிலை காணப்படுவதாகவும் பிந்திய செய்தி ஒன்று தெரிவிக்கிறது: (வ)

### 17வதுதிருத்தசட்ட ....

இப்பேச்சு வார்த்தையின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் கலந்து கொண்டார்.

இதேவேளை ஆளும் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம்ஜனாதிபதிசந்திரிகாதலைமையில்நேற்று பி.ப4.30மணி தொடக்கம் இரவு 7;30 மணி வரை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சரவை மாற்றம் குறித்தும் அரசியல் அமைப்பின் 17 வது திருத்த சட்டமூலம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அரசியல் அமைப்புநிர்ணய சபையில் எதிரணியினரின் பங்கு அதிகரிக்கக் கூடாதென்றும் எதிர்க்கட்சித் தலைவர் சார்பில் ஒருவரையும் நியமிக்கஅனுமதிக்க கூடாதென்றும் பெருமளவு பாராளுமன்ற உறுப்பினர்கள்கருத்து வெளியிட்டுள்ளனர்

தேர்தல் களத்தில் மட்டும் தேர்தல் ஆணைக்குழு ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் விசனம் தெரிவிக்கப்பட்டது:

இத் திருத்த சட்டமூலம் தொடர்பாக ஆராய்வதற்குரிய முழுப்பொறுப்பும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது; (வ)

## இந்திய - பாகிஸ்தான் மீதான பொருளாதாரத் தடை நீக்கம்
### அமெரிக்க அதிபர் புஷ் அறிவிப்பு

(வாஷிங்டன்)

இந்தியா மற்றும் பாகிஸ்தான் மீது அமெரிக்கா விதித்திருந்த பொருளாதாரத் தடையை நீக்கியுள்ளது; இதற்கான உத்தரவை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் டபிள்யு புஷ்பிறப்பித்துள்ளார்;

1998ம் ஆண்டு இந்தியாவும் பாகிஸ்தானும் ஏட்டிக்குப் போட்டியாக அணு வெடிப்புச்சோதனையை நடத்தி முடித்தன இதனை அடுத்து அமெரிக்க அரசு தென்னாசியாவில் அணுவாயுதப் போட்டி ஏற்படுவதை தடுப்பதற்காக இரு நாட்டின் மீதும் பொருளாதாரத் தடையை விதித்திருந்தது.

ஆனால் தற்போது ஆப்கானிஸ்தான் மீது தான் தொடுக்கும் தாக்குதல்களுக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் நிபந்தனையின்றி ஆதரவு வழங்குவதாகஉறுதியளித்துள்ளதையடுத்து அந்நாடுகள் மீதான பொருளாதாரத் தடை நீக்கப்படுவதாக அமெரிக்க ஜனாதிபதி அறிவித்துள்ளார்;

பொருளாதாரத் தடையை நீக்குவதற்கான உத்தரவுக் கடிதத்தை ஜனாதிபதி ஜோர்ச் புஷ் வெளிவிவகார அமைச்சர் கொலின் பவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் இத்தடை நீக்கம் தொடர்பாக இந்தியாவும் பாகிஸ்தானும்மகிழ்ச்சி தெரிவித்துள்ளன. (ந-5)

### சுதந்திர...

கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

17 வது அரசியல் திருத்த சட்ட மூலம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் எம்பிக்கள் ஒன்று சேர்ந்து ஒருமுடிவுக்குவருவது தான் நல்லது அரசியல் திருத்தச் சட்டமூலம் சம்மந்தமான விவாதத்தில் கலந்து விட்டு வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது வெளியேறுவதிலும் பார்க்க ஒட்டு மொத்தமாக விவாதத்திலும் கலந்துகொள்ளாமல் விடுவதே சிறந்தது;

இதில் நாம் அனைவரும் ஏகோபித்த முடிவை எடுக்க வேண்டும் இந்நிலையில் தமிழ்க்கட்சி எம்பிக்களின் சந்திப்பு ஒன்றுக்குஇன்று ஒழுங்கு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (வ)

### முல்லைக்கடலில்...

படையணியின் படகொன்று கடற்படையினரின் டோறாப்படகில் மோதியதாகவும்இதனையடுத்து மோதல் வெடித்ததாகவும் படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன;

நேற்று அதிகாலை முதல் பல மணிநேரம் இடம் பெற்ற இம் மோதலில் புலிகள் தரப்பில் 30 பேர் உயிரிழந்ததாகவும் அவர்களின் நான்கு படகுகள் மூழ்கடிக்கப்பட்டதாகவும் படைத்தரப்பினர் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்;

இதேவேளை படைத்தரப்பில் ஏற்பட்ட இழப்புக் குறித்து பாதுகாப்பு அமைச்சோ விடுதலைப் புலிகளோ தகவல் எதனையும் வெளியிடவில்லை,

இது இவ்வாறிருக்க கடந்த வாரம் பருத்தித்துறைக் கடற்பரப்பில் படையினரை ஏற்றிவந்த கப்பல் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தியிருந்ததும் தெரிந்ததே. (ந)

### இன்று

வாஷிங்டன் நியூயோர்க் நகரங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை விட இத்தாக்குதல் மோசமானதாக இருக்கலாமெனவும் அமெரிக்கா மேலும் தெரிவித்துள்ளது.

தாக்குதலுக்கான இலக்கு எதுவென குறிப்பிட முடியாமல் உள்ள போதிலும் இத்தாக்குதல் நேட்டோ அமைப்பு நாடுகள் அல்லது பாகிஸ்தானாக இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. (ந-5)

### 17வது

திருத்தத்தை ஆதரிப்பதா? அல்லது எதிர்ப்பதா என்று முடிவெடுக்கப்படவுள்ளதை கட்சியின்பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்; (வ)

### பிரேரணை

ஆனால் இம்முறை சிலநிபந்தனைகளின் அடிப்படையிலேயே நம்பிக்கை இல்லாத்தீர்மானத்திற்கு ஆதரவு வழங்க முடியுமென்று கூட்டணிவட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அரசு விதித்துள்ள தடை தொடர்பாக ஐக்கியதேசியக் கட்சி தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டும் என்ற நிபந்தனையைக் கூட்டணி எம்பிக்கள் விதிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது:

இதேவேளை நேற்று நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்திலும் நம்பிக்கை இல்லாப் பிரேரணை தொடர்பாக எம்பிக்கள் மட்டும்தனியாகக் கூடி முடிவெடுக்காமல் பொது சபையை கூட்டி முடிவெடுக்க வேண்டுமென்ற கருத்து முன்வைக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது; [வ]

### வாக்கெடுப்பு

சாராரும் தெரிவித்துள்ள போதும், இறுதியில் சட்டமூலம் தொடர்பாக பாராளுமன்றத்தில் உரையாற்றிவிட்டு வாக்கெடுப்பில்கலந்து கொள்ளாது வெளியேறுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புகளின் தடையைநீக்கி அவர்களுடன் பேசுவதற்கு அரசுஅக்கறை காட்டாமலும் தேசியப்பிரச்சினையில் எந்தவொருமுடிவுக்கும் வராது ஆணைக்குழுக்கள் அமைப்பதில் எந்த விதமான அர்த்தமும் இல்லை என்றும் கூட்டத்தில் வலியுறுத்திக் கூறப்பட்டது;

இது இவ்வாறுஇருக்க17வது திருத்த சட்டமூலம் தொடர்பாக தமிழ்க் கட்சிகள்ஒன்று சேர்ந்து கூட்டணி ரெலோ தமிழ்க் காங்கிரஸ் முடிவுஎடுப்பதற்காகஇன்று காலைஅவசரமாகக் கூடவுள்ளதாகவும் பிந்திய தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

கூட்டணியின் இந்த முடிவு தொடர்பாக வலம்புரி தனது 18ம் திகதிய வெளியீட்டில் செய்தி வெளியிட்டிருந்தமை தெரிந்ததே; (வ)


## பிரதேச செய்தியாளர் தேவை - பிரிவு 3

வலம்புரிப் பத்திரிகைக்கு பின்வரும் பிரதேசங்களுக்குச் செய்தியாளர்கள் தேவை;

தகுதி: க. பொ. த; உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி

பிரதேசங்கள்:

வேலணை, புங்குடுதீவு, நாரந்தனை, நெடுந்தீவு, எழுவைதீவு, அனலைதீவு, இளவாலை, பண்டைத்தரிப்பு, சில்லாலை, ஆவரங்கால் இடைக்காடு, நாயன்மார்கட்டு, குருநகர், பாஷையூர்,

விண்ணப்பங்கள் யாவும்

ஆளணி முகாமையாளர்
''வலம்புரி''
இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 27 - 09 - 2001 முன்னதாக அனுப்பிவைக்கவும்;

குறிப்பு; விண்ணப்பக் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் 'பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்' எனத்தவறாது குறிப்பிடவும்;

நிர்வாகம்


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.